XVC 544

கழக வெளியீடு: ௫௪௪

# நம்நாட்டுத் தலைவர்கள்

## இரண்டாம் புத்தகம்

## வீர சிதம்பரனார்

★

புலவர் அரசு

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1 மதுரை-1 திருநெல்வேலி-6
1970

ராஜு முதலியார் (1900)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 Jan 1951
Reprint: Jan 1970

V2y7M72
N 70

16219

NAM NAATTUTH THALAIVARKAL
Book II

Appar Achakam, Madras-1. ( /8 )

# பதிப்புரை

எத்தனையோ பெரியார்கள் நம்மிடையே தோன்றினார்கள். சிறந்த பணியாற்றி மறைந்தார்கள். நமக்கு வழிகாட்டும் எத்தனையோ நிகழ்ச்சிகள் அவர்கள் வாழ்வில் நடந்தன. எண்ண எண்ண நெஞ்சை உருக்கி, மானத்தைப் பெருக்கி உள்ளங்களுக்கு உணர்வூட்டும் சிறந்த தெய்வத்தன்மை அவற்றிற்கு உண்டு.

நம்நாட்டுத் தலைவர்களைப் போற்றவும் அவர்கள் வாழ்வின் வழிநின்று பயன்பெறவும் இளமாணவர் முனையவேண்டும். அதற்கென எழுந்ததே இந்நூலும் இவ்வரிசையிற் பிறவும்.

வீர சிதம்பரனார் தென்தமிழ் நாட்டிடைத் தோன்றிய மாவீரர். நாட்டுக்காக அனைத்தையும் இழந்து அல்லல் பல அடைந்த ஆண்மையாளர். கப்பல் ஓட்டி ஆங்கிலரைக் கதிகலங்க வைத்த அண்ணல்; சீரிய தமிழ்ப்புலவர். அவர் தம் சாந்தத் தவழும் முகமும் சிந்தனை நிறைந்த கண்களும் என்றும் மறக்கமுடியாதன. இந்நூல் அவர் வரலாற்றின் சுருக்கமாகும்.

தமிழகம் ஏற்றுப் பயனெய்துமாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

## உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | தோற்றுவாய் | ... | 1 |
| க. | இளமையும் கல்வியும் | ... | 4 |
| உ. | தொழில் புரிதல் | ... | 7 |
| ௩. | நாட்டுப் பணி | .... | 15 |
| ௪. | நாட்டுப்பணிக்குப் பரிசு! | ... | 29 |
| ௫. | பிற்காலம் | ... | 62 |
| | தேர்வுப்பயிற்சிகள் | .... | 75 |



# வீர சிதம்பரனார்

—o—

**தோற்றுவாய்**

செந்தமிழ்ப் பண்புறு நாட்டில், ஒரு சிற்றூரில் மிகமிகப் பழைய காலத்தில் ஒரு மறக்குடி முதியவள் இருந்தாள். தோல்வற்றி நரம்புதளர்ந்து காணப் பெறும் அவளுடைய ஒரே மகன் நாட்டுப் போருக்குப் போயிருந்தான். அவனை நினைந்து அம் முதியவள் கவலையுடன் இருந்தாள். "போர் முனையில் எங்கே அகப் பட்டுக் கொள்கிறானோ? கை கால் ஒடிந்துவிடுமோ? உயிருடன் வருவானோ?" என்றுதான் கவலைப்பட்டிருப் பாள் என்று நீங்கள் நினைப்பீர்கள். அவ்வாறு கவலைப் படுவது இப்போதுள்ள நம் அன்னையர் இயற்கை. 'பந்திக்கு முந்திக்கொள்; படைக்குப் பிந்திக்கொள்' என்று கோழைத் தன்மையைப் பாலுடன் பரிந்தூட்டு வது இக்காலைய நம் தாயரின் சால்பு!

அம் மறக்குடி முதியவள் அவ்வாறு கவலைப்பட வில்லை! "எங்கே என் மகன் உயிரை வெல்லமாக நினைத்துப் புறங்காட்டி ஓடிவந்து விடுகின்றானோ? எங்கே முதுகிற் புண்பட்டு வீழ்ந்து கிடக்கின்றானோ? நம் மறக்குடிக்கு மாசு தேடிக்கொண்டு வருவானோ?" என்று நினைந்தே நெஞ்சக் கவலைகொண்டாள். தவறே புரியாத சான்றோர்கள் எங்கே தவறிவிடுவோமோ

என்று கவலையுறும் நிலைதான் அது. தன் மகன் வீர னென்பதை நன்கறிந்தாலும் சற்றும் வீரநிலை தளர லாகாது என்ற எண்ணத்தின் சின்னம் அது.

ஒரு குறும்பன் அம் மூதாட்டியின் கவலையைக் கண்டு தனக்குள் நகைத்தவாறு வேடிக்கையான செயல் ஒன்று செய்துவிட்டான். அவன் அம் முதியவளை அணுகி, 'உன் மகன் முதுகிற் புண்பட்டுக் கிடக்கிறான்,' என்று கூசாது கூறிவிட்டுப் போய்விட்டான். கேட்ட முதியவள் வாட்டமுற்றாள். சீறினாள். "அங்ஙனம் அவன் முதுகிற் புண்பட்டுக்கிடப்பின் அவன் பாலுண்ட மார்பை அறுத்தெறிவேன்," என்று வாளொன்றேந்திப் போர்க்களம் புகுந்தாள். அங்கே தன் மகன் மார்பிற் புண்பட்டுக் கிடப்பதைக் கண் டாள்! என்னென்பது அவள் மகிழ்ச்சியை! இவனைப் பெற்றபோ தடைந்த மகிழ்ச்சியினும் பெருமகிழ்வு கொண்டாள்!

இது நம் பண்டைய நிலை.

இக்காலத்தில் இதனைக் கேட்டாற் கற்பனை யென்று கூசாமற் கூறிவிடுவர். அத்தகைய நிலைக்குத் தமிழ் மக்களின் உள்ளம் தாழ்ந்துவிட்டது! தமிழ் மக் களின் மெய்யிலே ஓடும் இரத்தம், அத் துணைக் கோழைத் தன்மையிலே ஊறிவிட்டது! அன்னையர் தம் அருமை மக்களுக்குப் பாலும் உணவும் பரிந்தூட் டும்போது, ஆலமரத்து முனியையும், கரும்புத் தோட் டத்துக் காட்டேரியையும், ஏரிக்கரை ஐயனாரையும், இருட்டில் உலவும் 'கறுப்பை'யும் பற்றிக் கதைகட்டிக் கூறிக் கூறி நெஞ்சுரமில்லாத நீளுடலை வளர்த்து விட் டனர்! தமிழ் மக்களின் உள்ளத்திலே, 'இராமனுண்

டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன?' 'நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச் சுமை போகாது!' என்ற அடிமை யூற்றை ஊறச்செய்தவர்கள் அவர்களை ஈன்ற அன்னையரே! புலிப்பால் பருகாமற் கோழைப் பாலைக் குடித்துக் குடித்துப் பல நாட்களாகப் பாழ்பட்டுக் கிடக்கின்றனர் பண்புறு தமிழ் மக்கள்.

"எதிரியின் வேல்வீச்சைக் கண்டு கண்ணை யிமைப்பினும் வீரத்துக்கு இழுக்கு," என்றிருந்த தமிழ் நாட்டிலே காவலர் (போலீசு) சிவப்புத் தலைப்பாகையைக் கண்டவுடனே—அவர் நம்மவர், நம் பொருளுக்கும் உயிருக்கும் காப்பாளர் என்பதையும் மறந்து—ஓடிப் பதுங்கும் அவ் வளவிற்குத் தாழ்ந்தனர் தமிழர். கோழைத் தனங் குடி கொண்டுவிட்டது. இத்தகைய இழிநிலை நீங்கி வீரம் மிகுந்த மேன்மக்களாகத் தமிழர் கிளர்ந்தெழும் நிலையை ஊட்டியவர்களிற் சிறந்தவர் நம் **வீர சிதம்பரனார்**. பாரத நாட்டு உரிமைப் போர்க்குத் தென்னாட்டிலே கால்கோள் செய்தவர் அப்பெருந்தகை வீரரே.

## க. இளமையும் கல்வியும்

*வீரச் சிறுவர்*

தமிழ் நாட்டிற் சிறப்புடையது **பாண்டியநாடு**. முச் சங்கம் இருந்த இடம் பாண்டிய நாடேயாகும். செந் தமிழை வளர்த்த தனிச் சிறப்புடையதும் பாண்டிய நாடே. தீமை செய்தவன்போலச் செங்கை குறைத்துக் கொண்ட பொற்கைப் பாண்டியனும், **கண்ணகியின்** சிலம்பினுற் கோடிய செங்கோலைத் தன் ஆருயிரை நல்கி நிமிர்த்திய நெடுஞ்செழியனும் பாண்டிய மன் னர்களே.

இத்தகைய பாண்டிய நாட்டிலே, **திருநெல்வேலி** மாவட்டத்திலே **ஓட்டப்பிடாரம்** என்னும் **ஊரிலே**, விலகி யிருந்த தமிழ்நாட்டின் சிறப்பை ஓட்டிக்கொடுத்த— தமிழ் மக்களின் மனப் பாம்பை ஆட்டிய பிடாரராகிய— சிதம்பரனுர் ஒளிசெய்தார். ஓட்டப்பிடாரத்திற்கு **அளகை** யென்றெரு பெயரும் உண்டு. வடதிசைத் தலைவனுன குபேரன் நகரும் அளகையே. ஓட்டப் பிடாரத்தைத் தென் அளகை என்றும் செப்புவது உண்டு. ஓட்டப்பிடாரம் தமிழ் நாட்டு வரிப்புலியாகிய **வீரபாண்டியக் கட்டபொம்மன்** பிறந்த பெரும்புகழை யுடையது. அவன் அரசுபுரிந்த தலைநகரான பாஞ்சா லங் குறிச்சி அதன் அருகில் உள்ளது. தேசீயக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் தோன்றிய **எட்டையபுரம்** ஓட்டப்பிடாரத்திற்கு வடக்கே எட்டுக்கல் தொலைவில் உள்ளது.

இங்ஙனம் எவ்வகையிலும் சிறப்புற்ற ஓட்டப் பிடாரத்தில் நம் சிதம்பரனுர் **வேளாள மரபில் உலகநாத பிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும்** கி. பி. 5-9-1872 வியாழக்கிழமையன்று மகவாகப் பிறந்தார். வெள்ளை

யரின் தனியரசிற்குப் பாரதநாட்டில் அன்றே ஆட்டங் கொடுத்தது. அத்தகைய சிறந்த நன்னாளை நாம் கொண்டாடவேண்டும். அவருக்குத் தம்பியர் நால்வர்; தங்கையர் இருவர். இவரே குடும்பத்தின் முதற்பிள்ளை.

இவருக்குக் கணக்காயராக இருந்தவர் (தொடக்கக் கல்வி ஆசிரியர்) வீரப்பெருமாள் அண்ணாவியார். தாய் மொழியாகிய தமிழிற் பிழையற எழுதப் படிக்கத் தெரிந்த பிறகே ஆங்கிலத்தைக் கற்றார். ஆங்கிலப் படிப்பைத் தொடக்கிக் கொடுத்தவர், அறம் வளர்த்த நாத பிள்ளை என்பவர். அக்காலத்தில் ஒட்டப்பிடாரத்தில் ஆங்கிலப்பள்ளி இல்லை. உலகநாத பிள்ளையாகிய இவர் தந்தையார் தம் மைந்தருக்காகவே ஆங்கிலச் சிறு பள்ளியொன்றை அமைத்து, அறம்வளர்த்த நாதரை எட்டையபுரத்திலிருந்து வருவித்து, ஆசிரியராக அமைத்தார். 'நல்லாரொருவர் உளரேல் அவர் பொருட்(டு) எல்லார்க்கும் பெய்யும் மழை' ஆகையால், சிதம்பரனாரை முன்னிட்டு, அவ்வூரிலுள்ள சிறுவரெலாம் ஆங்கிலங் கற்கத் தொடங்கினர். பிறகு, தூத்துக்குடியிலுள்ள 'செயின்ட் பிரான்சிஸ் சேவியர்' உயர்நிலைப்பள்ளியிலும், அந்நகரில் இருக்கும் 'கால்டுவெல்' பள்ளியிலும் படித்து நம் சிதம்பரனார் மெட்ரிகுலேஷனை முடித்தார்.

'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்றாற் போல நம் சிதம்பரனார் சிறுவராக இருக்கும்போதே வீரராக இருந்தார். அவர் வேறு, வீரம் வேறு என்றில்லாமல் வீர வுருவாகவே விளங்கினார்; வீரத்தின் கொழுந்து சிதம்பரக்கொழுந்து எனும்படி இலகினார்.

இக்காலச் சிறுவர்கள் வீரமென்பது கடையில் வாங்கும் மருந்துச் சரக்கெனக் கருதுவார்கள்; அஃது

ஒரு மக்கட்பண்பு என மருந்துக்கும் இலையார். ஆகவே, நம் சிறுவர் சிதம்பரனார் காளையரிற் கதிரவன்போலக் காணப்பட்டார். திண்ணிய வுடலும் திண்ணிய வுளமும் ஒருங்கே அமைந்தன அவருக்கு. சிறுவர்களின் விளையாட்டுக்களான சுவர்மேல் நடத்தல், மரமேறுதல், கல்லெறிதல், கோலி விளையாட்டு, குதிரைச்சவாரி, கோலேறி நடப்பது, கால்மாறி ஓடுதல், பந்து விளையாட்டு, சடுகுடு, கிளித்தட்டு, நீர்விளையாட்டு, ஓட்டம், கம்பு சுற்றல், கத்தி வீசுதல், கசரத்து, பஸ்கி, குஸ்தி, துப்பாக்கிச் சுடுதல், விற்பயிற்சி முதலான பலவகையினும் சிறப்புடன் விளங்கினார்.

அவ்வாறே மாணவ நிலையினும் கலையின் கருவூலமாகக் காணப்பெற்றார். ஆங்கிலத்தினும் தமிழே அவரை யினித்து இசைகொளச் செய்தது.

> ' மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
> யாவுள முன்னிற் பவை '

என்றார் வள்ளுவர். 'நுண்ணறிவாகிய தன்னறிவும் நூலறிவும் உடையார்க்கு விளங்காதன இல்லை' என்பது அதன் கருத்து. நம் சிதம்பரனார் அத்தகையர். உடல் வலிமையும் வீரமும் கலையறிவும் நுண்ணறிவும் ஒருங்கே அமைந்து, மக்களிற் சிறந்தவராக மதிப்புற்றார்.

———

## உ. தொழில் புரிதல்

### எழுத்தாளர்

மெட்ரிகுலேஷன் படிப்பு முடிந்தவுடன் ஒட்டப்பிடாரத்தில் உள்ள வட்ட (தாலுக்கா) அலுவலகத்தில் எழுத்தாளராகத் தந்தையரால் அமர்த்தப்பெற்றார். ஒரே இடத்தில் அமர்ந்து, அறிவைப் பயன்படுத்தாமல், ஒரே மாதிரியான, 'ஈயடித்தான் ரைட்டிங்' அலுவல் அவருக்குப் பிடிக்கவில்லை. அந்தோ! இத்தகைய வேலைக்காகவே படிக்கும் நம்நாட்டு இளைஞர்களின் நிலை மிக மிக இரங்கத்தக்கது! கலையென்பது கருத்துக்கினித்தல் வேண்டும். கற்பனைக்கு வழிகாட்டியாக மன்னுதல் வேண்டும் கருத்துப்பதியாத கலையை வயிற்றுப் பிழைப்புக்காக உருப்போட்டுக் கண்ணும் கருத்தும் மங்கும் கடைப்பட்டநிலை கல்வியில் இருத்தல் கூடாது. சிதம்பரனார்க்கு எழுத்தாளர் அலுவல் பிடிக்காததால், தந்தையிடம் வழக்கறிஞர் தொழிலுக்குப் படிக்க உடன்பாடு வேண்டினர்.

### வழக்கறிஞர்

' தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் '

ஆகையால், மைந்தன் கருத்தைத் தந்தை மறுக்காமல், திரிசிரபுரத்திற்குச் செல்லவிடுத்தார். திரிசிரபுரத்திற் சிறந்த சட்ட அறிஞர்களான கணபதி ஐயரும் அரிகர ஐயரும் சிதம்பரனாருக்குச் சட்ட நெறியைக் காட்டினர்கள். 1895 ஆம் ஆண்டில் மாணவர் சிதம்பரனார் சட்டத்தேர்வில் தேர்ச்சிபெற்று வழக்கறிஞர் சிதம்பரனாரானர். ஒட்டப்பிடாரத்திலேயே வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினர்.

வழிவழியாக வழங்குவது வழக்கம். மக்களுக்குரிய ஒழுங்கு எவ்வாறு பல நெடுநாட்களாக வழங்கி வருகிறது என்பதை அறிந்தவர்களே வழக்கறிஞர். ஒழுங்கின் மரபைப் பலநாட்டு நூல்களினின்றும் தொகுத்துணர்ந்த அந்த அறிஞர்கள் பாமர மக்களின் சார்பாக அறநிலையத் தலைவரிடம் அவர்களின் வேண்டுகோளை விளக்குவார்கள். ஆகவே, வழக்கறிஞர்கள் சிறந்த அறிஞர்களாகவும் மக்களின் வழக்கை நன்கு உணர்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலும், உண்மையான வழக்குக்கே வாதிடும் இயல்புடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

ஆனால், இக்காலத்திலே வாதி பிரதிவாதிகளாகிய இருசாரார்க்கும் வழக்கறிஞர்கள் கிடைக்கிறார்கள். வழக்கறிஞர்கள் தப்பான வழக்குக் கொண்டுவரும் தம் கட்சிக்காரருக்கு உண்மையை விளக்கி வழக்காடாமற் செய்தல்வேண்டும்; அற நிலையங்களில் அறத்தையே வற்புறுத்துதல் வேண்டும். இவ்வாறு உண்மையான முறையில் வழக்கை வாதிப்பவர்கள் மிகச் சிலரேயிருக்கின்றனர்.

வ. உ. சிதம்பரனார் உண்மையை வெளிக்கொணரவே வாதிடுவார். காவலராயினும் தப்பு வழக்குக் கொணர்ந்தால் விட்டுக் கொடுக்கமாட்டார். எதிர்சார்பில் காவலரின் தவறான செயலை வெளிக்குக் கொணர்வார். இரண்டு தலைமுறையாக வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்ட குடும்பம் சிதம்பரனார் குடும்பம். ஆகையால், இயல்பாகவே சிதம்பரனாரைத் தேடிப் பெருவாரியான கட்சிக்காரர்கள் வந்தனர். மேலும், ஒழுங்காகவும் திறமையாகவும் தம் கட்சிக்காரருக்கு உழைக்கும் கடமையுணர்ச்சியும் சிதம்பரனாரிடம் சேர்ந்

திருந்தன. அது பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆயிற்று. வரவும் பெருகியது. ஆனால், வரவைப் பெரிதாக எண்ணாமல் வாய்மை யொன்றையே பேணிவந்தார் நம் சிதம்பரனார். ஒழுக்கமில்லாத வழக்கறிஞரை வெறுத்தும் வந்தார்.

ஒழுங்காகச் செல்வோரை உலகில் வெறுப்போர் பலர். ஆகவே, ஆளுந்துறையாரும் இவரிடம் வெறுப்புக் காட்ட நேர்ந்தது. எனினும், சிதம்பரனார் அஞ்சா நெஞ்சராக வாய்மையே கைக்கொண்டார். ஒருமுறை சில கொடியோர்கூடித் தலைமைக் காவலர் (ஹெட் கான்ஸ்டபில்) ஒருவரைக் கொன்றுவிட்டனர். கொன்றவர்களைக் கண்டுபிடிக்க முடியாத காவலரும் அதிகாரிகள் சிலருங்கூடித் தாம் உத்தேசமாகப்பற்றிய குற்றவாளிகளுக்காகச் சிதம்பரனார் வாதாடாமற் செய்ய ஒரு திட்டமிட்டனர். தாங்கள் பற்றிய குற்றவாளிகளுடன் சிதம்பரனாரையும் சேர்த்தனர். குற்றவாளிகட்காக வழக்கிட வாராமல் இருந்தால் அப் பட்டியலிலிருந்து சிதம்பரனார் பெயரை எடுத்து விடுவதாகவும் உடன்படிக்கை வேண்டினர். முள்ளை முள்ளாலேயே எடுக்கவேண்டுமென உறுதிபூண்ட சிதம்பரனார் நன்றென ஒப்பித் தம் பெயரை விலக்கிக் கொண்டார்.

கொலைவழக்கு அறமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட அன்று சிதம்பரனார் குற்றவாளிகளுக்காக வாதாடத் தோன்றினார். அதிகாரிகளும் காவலரும் திடுக்கிட்டனர். எனினும், அவரை ஒன்றுஞ் செய்ய முடியாமல் விழித்தனர். சிதம்பரனார் வாதாடிக் குற்றமற்ற எதிரிகளை விடுதலை செய்வித்தார். அன்றுமுதல் காவலர் அஞ்சிநின்றனர். மேலும், சில அதிகாரிகள்

கைக்கூலி வாங்கியதாக வந்த ஒரு வழக்கில் அவர்களுக்கெதிராக வழக்குரைத்து, அவர்களை அரசாங்கத்தார் தண்டிக்குமாறு செய்தார் நம் சிதம்பரனார்.

இவ்வாறு ஒட்டப்பிடாரத்திலே செய்துவந்த வழக்கறிஞர் தொழிலைத் தூத்துக்குடிக்கு மாற்றிக்கொண்டார். அங்குத் தொழில் தொடங்கிய காலம் கி. பி. 1900 ஆகும். சிதம்பரனார் தூத்துக்குடிக்கு வந்ததற்கு அவர் தந்தையும் ஒருவகையிற் காரணராவார். இவர் காவலரையும் ஆளும் மேலவரையும் எதிர்த்துநிற்பது தந்தையாருக்கு அச்சத்தை யளித்தது. தந்தையார்க் குற்ற கலக்கத்தை நீக்கமுடியாதிருந்ததால், தொலைவில் இருப்பதே நன்றெனத் துணிந்து தூத்துக்குடிக்குச் சென்றனர்.

தூத்துக்குடியிலே பிறர் பழிதூற்ருமல் சீரையே தூற்றுமாறு தொழிலியற்றி வளநிதி குவித்தார். பொருளை நன்னெறியிலே சேர்த்துத் 'தக்கார்க்கு வேளாண்மை' புரிந்தார். (வேளாண்மை-உபகாரம்) அங்குப் பிடித்த வழக்குகளுக்குப் பட்டியல் கொடுக்க முடியாது. அவரே கூறும் அவர் வரலாற்றில் உள்ளவாறு முதலிலும் முடிவிலும் உள்ள இரு வழக்குகளை மட்டும் எடுத்துக்கூறுவோம்.

ஒட்டப்பிடாரத்திற்கருகில் **முடிமன்** என்றொரு சிற்றூர் உள்ளது. சிதம்பரனாரின் முன்னோர்கள் காலம் முதலாகப் பழகிப் பணிபுரியும் **வேதநாயகம்** எனும் பள்ளன் அங்கே இருந்தான். அவனைக் காவலர் ஒரு குற்றத்தில் சேர்த்துவிட்டனர். சிதம்பரனார் வேதநாயகத்துக்காக நின்று வாதாடி வெற்றிபெற்று விடுதலை செய்வித்தார். திருவாவடுதுறை மடத்தில் தம்பிரானுக

இருந்த ஆறுமுகம் பிள்ளை யென்பவர் ஆசாரியொருவனைக் கொன்றுவிட்டதாக வந்த வழக்கிலே, குற்ற மற்ற ஆறுமுகம் பிள்ளைக்காக வழக்கிட்டு ஆறுமுகம் பிள்ளையை விடுதலை செய்வித்தார்.

ஆகவே நம் சிதம்பரனார் பொருளையே பெரிதாக எண்ணாமல் நன்னெறியையே பெரிதாக நினைத்து வழக்கறிஞர் தொழிலை நடத்திவந்தார் என்று அறியலாம். எனவே, வழக்கறிஞராக இருக்கும்போதும் வீர வழக்கறிஞராகவே இவர் இருந்தார்.

**இல்லறம்**

அறம் என்பது கடமை. அஃது இல்லறம் துறவறமென இருவகைப்படும். அவற்றுள் இல்லறமென்பது மனைவியுடன் வாழ்ந்து உலகுக்குப் பணியாகச் செய்யப் படும் அறம். 'இல்லற மல்லது நல்லற மன்று.' அத் தகைய இல்லறத்திற் கணவனும் மனைவியும் மன மொருமித்து அறிவுடையராக நன்னெறியிலே செல்ப வராக இருந்தால் அதுவே எவ்வழியினும் இனிமை யுடையது.

சிதம்பரனார்க்கு வாய்த்த முதல்மனைவியார் வள்ளி யம்மையார் எவ்வகையினும் சிறப்புடையவர். பண்பும் அறிவும் நிரம்பப் பெற்றவர். சிதம்பரனார் தம் 23ஆம் வயதில் அவ்வம்மையாரை மணந்தார். வள்ளியம்மையார் திருச்செந்தூர் சுப்பிரமணிய பிள்ளையவர்களின் திருமகளார்; கலைநிறைந்த கலைமகளார்; திருக்குறளைப் பொருளுடன் ஓதியுணர்ந்த உயர் அறிவினர்; ஓதியுணர்ந்ததோடு பிறர்க்கும் உரைத்துத் தாமும் அதன் படி நடப்பவர்; தம் கணவர் அறிஞருடன் கலைத்திறம் ஆராயும்போது மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருப் பார்; பிறகு, தாம் கணவருடன் உரையாடும்போது

தாம் உணர்ந்த நுண்பொருள் கூறி மகிழ்வார். சிதம்பரனார் மிக்க வியப்பும் உவகையும் பூரிப்பும் கொள்வார்.

இவர்களுடைய இல்லத்தில் **இராமைய தேசிகர்** என்னும் பெயருடைய ஒடுக்கப்பெற்ற குலத்தவர் ஒருவர் தங்கியிருந்தார். அவருக்குப் புறக்கண்ணிரண்டும் ஒளியில்லாதவை (குருடு). எனினும், அவர் அகக்கண் (அறிவு) நிறைந்தவர். அவரை ஆதரித்து உணவளிக்கும் தொண்டுபுரிந்தனர் இருவரும். இச்செயலை அண்டை அயலோர் தவறெனத் தூற்றினர். சிதம்பரனாரிடமுந் தெளிவாக, 'இழிகுலத்தவனை உடனிருத்தி உணவளித்து வாழ்தல்' இழிவென எடுத்துக் காட்டினர். சிதம்பரனார் உள்ளம் குழம்பியது. சென்றுரைத்தார் சீரிய காதலியாரிடம்! அம்மையார் கேட்டு அகமுற நகைத்தார்.

அவர் கூறியவை:

"தாங்கள் எல்லாம் உணர்ந்தவர்கள். எல்லாப் பொருளிலும் கடவுள் உளார் என்று கூறியுள்ளீர்கள். உருவம் முதலியவற்றால் வேறுபாடு சிறிதும் காணப்படாத மக்களின் பிறப்புக்கு மட்டும் வேறுபாடு ஏன்? குலம் என்பது மக்களின் கற்பனைதானே? மேலும், துறவிக்கும் குலம் இல்லையே. ஆகையால், குலம் என்னும் சொல்லை ஏற்றிடாமல் ஒழிப்போம். இவ் வேறுபாடுகளை முன்னரே நீக்கி யிருந்தால், உலகத்திலுள்ள பேதைகள் பிழையெனப் பேசார். கூறுவோர் கூறுக; அப் பெரியாரைப் பேணுவதே நம் கடமை. அவர் இங்கேயே இருக்கட்டும்."

அப் பெருமாட்டியின் பேரறிவையும் மனத் திண்மையையும் நோக்குங்கள். தீண்டாமை ஒழியாத

அக் காலத்திலேயே வள்ளியம்மையார் தீண்டத்தகாதவரெனும் ஒருவருக்கு வீட்டில் இடங்கொடுத்துப் பணியும் புரிந்தார். திண்டாமை ஒழியப் பேச்சுப்பந்தல் போடும் இக்காலத்திலும் பொது இடங்களில் அவர்களைத் தடுக்காதவாறு சட்டமிட்ட இக்காலத்திலும்—அத்தகைய சமநெறி நோக்குடைய மங்கையர் கிடைப்பது மிகவும் அரிதாயுள்ளதே! தமிழ்நாட்டிலே சட்டத்தினால் பொதுமக்களைக் கட்டுப்படுத்தி இறைவன் கோயிற்கதவைத் திறந்தார்களே ஒழியப், பொது மக்களே தங்கள் உள்ளக் கதவை அன்பெனும் திறவுகோலால் திறந்து தீண்டத்தகாதவ ரென்போரை அழைத்துக் கொள்ளவில்லையே! காலந்தான் தமிழ் மக்களின் மனக்கதவைத் திறக்கவேண்டும்! நிற்க,

சிதம்பரனார் நண்பர்கள் பலருடன் உணவுக்கு வந்து விட்டால், வள்ளியம்மையார் சிறிதும் முகஞ் சுளிக்காமல் உள்ளன்புடன் உணவளித்தனுப்புவார். 'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும்' செம்மையுடையார் இவர்கள் இருவரும். இல்லறத்திற் சிறந்தது விருந்தோம்புதலே. 'விருந்தில்லாச் சோறு மருந்து' என்னும் பழமொழியை உணர்ந்து, 'மருந்தேயாயினும் விருந்தோடுண்'பர்.

வள்ளியம்மையார், 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாக இருந்தார். 'தன்னையும் ஒழுக்கத்தாற் காத்துக் கொண்டு, தன் கணவனை உணவு முதலியன (அன்னை போல் அன்புடன்) நல்கிக் காத்து, புகழ்பெற்ற பெரியோர் மொழியைக் காப்பாற்றிச் சிறிதும் தவறு செய்யாதவள் பெண்' என்பது அப்பாட்டின் பொருள்.

இத்தகைய சிறப்புடைய வாழ்க்கைத் துணைவி யாரை 1900இல் இழந்தார் சிதம்பரனார். சிறகொடிந்த பறவையெனத் திகைத்தார். 'அன்னை தயையும், அடியாள் பணியும், மலர்ப்பொன்னின் அழகும் புவிப் பொறையும், விறல்மந்திரி மதியும்' உடைய காதலி யாரைக் காலங் கொண்டுசென்றதே யெனக் கலங்கினார்.

பிறகு, பெற்றோர் வற்புறுத்தலின்மேல் வள்ளி யம்மையாரின் மரபிலேயே பிறந்த மீனாட்சி யென்னும் அம்மையாரை மணந்தார். அந்த அம்மையாரும் நற்குண நற்செய்கைகளிலே சிறந்து விளங்கினார்.

## ௯. நாட்டுப்பணி

*நாட்டுப்பற்று*

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்—நற்றவ வானினும் நனிசிறந் தனவே' என்பர் பெரியோர். நம் அன்னையார் நம்மைப் பத்துத் திங்கள் சுமந்து பெற்றுப் பாலூட்டிச் சீராட்டிப் பண்புடன் வளர்த்துப் பெரியவர்களாக்கிவிட்டார். நாம் பிறந்த நாடோ நாம் தோன்றியது முதல் இறந்து பிணமான பின்னரும் நம்மைச் சுமக்கிறது. நமக்கு வேண்டிய உணவை நல்குகிறது. ஆகவே, அன்னையினும் பன்மடங்கு ஆதரவு செய்கிறது அத்தகைய நாட்டின்மேற் பற்றில்லாத் தீயவன் யாவராலும் நஞ்சென வெறுக்கத்தக்கவன். நாம் பிறந்த தமிழ்நாடு பழம்பெருநாடு. இயற்கை வளம் பல நிறைந்தது. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ்நாடு' என்று விடுதலைவீரர் பாரதியார் பாடுவதைப் பாருங்கள். தமிழ்நாட்டிற் பிறந்த நாம் பெருமிதங்கொள்ளற்குரிமை பெற்றுள்ளோம்.

தமிழ்நாடு பாரதநாட்டின் தென்பகுதியிலுள்ளது. பாரதநாடு எவ்வாறோ ஆங்கிலேயர் வசமாகி அடிமை நாடாகிக் கிடந்தது. மக்களெல்லாம் உரிமையுணர்ச்சியற்றவர்களாக மயங்கிக்கிடந்தனர். 9600 கி. மீட்டர்களுக்கப்பாலுள்ள சிறு கூட்டத்தாரான ஆங்கிலேயர் பாரதநாட்டை அடிமைப்படுத்திக்கொண்டு, நாட்டின் செல்வத்தைச் சுரண்டும் செயலில் ஈடுபட்டிருந்தனர். 'ஊரிரண்டுபட்டாற் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' அன்றோ? ஆங்கிலேயர் அத்தகைய பிரித்தாளும் சூழ்ச்சியிற் பெயர் பெற்றவர்கள். நிற்க,

வங்கத்தை லார்டு கர்சான் என்ற 'வைசிராய்' இரண்டாகப் பிரித்தார். இந்து வங்காளம் என்றும், முஸ்லிம் வங்காளம் என்றும் அப்பிரிவுகளுக்குப் பெயர் மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கு மாறாக இவ்வாறு பிரிப்பது ஆட்சியின் நன்னோக்கமாகாது. ஆகவே, நாட்டுப்பற்று மிகுந்த வங்கமணிகள் அதை ஒப்புக்கொள்ளாமல் ஒன்றுபட்டிருக்கவே கிளர்ச்சி செய்தனர். அக்கிளர்ச்சி நாடெங்கும் பரவியது. வங்கக்கிளர்ச்சி பாரதநாட்டுக் கிளர்ச்சியாயது. பாரதமக்கள் வெளிநாட்டுப் பொருள்களை வெறுத்து விலக்கினர். வெளிநாட்டுத் துணிகளைத் திலகரின் தலைமையில் நெருப்பில் இட்டனர். வெளிநாட்டாடை எரிவது வெளியாரின் ஆட்சிக்குத் தீயிட்டதுதான் என்று மக்களின் மனம் பொங்கியது.

விவேகானந்த மடத்தினரான இராமகிருட்டிணானந்தரால் தெளிவுகொண்டு வெளியாரின் ஆட்சியிலே வெறுப்புக்கொண்டிருந்த சிதம்பரனாருக்கு இது நல்ல வாய்ப்பாயிற்று. அவர் சீற்றங்கொண்டு கோளரியென முழங்கி யெழுந்தார்; வழக்கறிஞர் தொழிலைச் சுருட்டி வைத்துவிட்டுத் தம்மிடமிருந்த வெளிநாட்டாடைகள் அனைத்தையும் 'சொக்கப்பனை'யிட்டார். வெளிநாட்டுப் பொருள் எதனையும் வாங்குவதில்லையென மனவுறுதி கொண்டார். பிறரைத் திருத்துவதற்குமுன் நம்மைத் திருத்திக்கொள்வதுதான் நலம் பயக்கும். பிறர்க்குரைக்கும் மேடைப் பேச்சுடன் நின்றுவிடுவது எட்டுணையும் நன்மை தராது. ஆகவே, சிதம்பரனார் தம்மையே முதலில் தூய்மைசெய்துகொண்டார். அவரைக் கண்ட தமிழ்மக்கள் ஆரவாரித்தெழுந்தனர். அவர்களிடையே தம் நோக்கத்தை விளக்கினர் சிதம்பரனார். வெளிநாட்டுப் பொருள்களின்மேல் வெறுப்புப் பரவிற்று.

தூத்துக்குடியில், 'கைத்தொழிற் சங்கம்' எனவும், 'தரும சங்கம்' எனவும் இரு கழகங்களைச் சிதம்பரனார் அமைத்து நாட்டுப்பற்றை ஊட்டினார். எங்கும் 'வந்தே மாதரம்!' 'வாழ்க சுதேசியம்!' 'சொந்தத் தேசம் சுகம் பெறுக!' என்னும் மொழிகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கூத்தாடின! அவை வேலியென அமைந்து போலிச் சுதேசிய மிருகம் வந்து அந்தக் கழகங்கள் இரண்டையும் அழிக்காமல் காத்தன. அவ்வேலியை அடிக்கடி கண்காணித்து, அக் கழகங்களைப் பெற்ற தாயென நம் சிதம்பரனார் பேணிவந்தார்; நண்பர்களைக் கூட்டிக்கொண்டு வாதம் என்னும் மண்வெட்டியால் மக்களின் மனமான நிலத்தைப் பண்படுத்திப் பாத்தி கோலினார்; அன்பெனும் நீரை நாவென்னும் ஏற்றத்தால் இறைத்து அக் கழகச் செடியை நன்கு வளர்த்தார். அபேதானந்தர், பிரமானந்தர் என்னும் இருவர் (விவேகானந்த மடத்தினர்) தென்றலென வந்து சேர்ந்தனர். அவர்களுடைய துணையைக்கொண்டு அக் கழகங்களை வளர்த்துத் 'தரும சங்க நெசவு சாலை,' 'சுதேசிய நாவாய்ச் சங்கம்,' 'சுதேசியப் பண்டகசாலை' என்னும் பெயர்களால் மணம் வீசச்செய்தார்.

இவற்றை வளர்க்கும்போது நேர்ந்த இடுக்கண்கள் பல; குற்றமற்ற நலன்களும் பல.

**வீரக் கப்பலோட்டி**

சுதேசிய நாவாய்ச் சங்கத்தைத் தாம் செயலாளராக இருந்து நடத்தினார். அதன் தலைவர் **பாண்டித்துரைத் தேவர்**. அச்சங்கம் முதலில், 'ஷாலைன் ஸ்டீமர்ஸ் கம்பெனி'யெனும் வெளிநாட்டுக் 'கம்பெனி'யிடம் கப்பல்களைக் குத்தகைக்குப் பெற்றுத், தூத்துக்குடிக்கும்

கொழும்புக்கும் போக்குவரத்துப் புரிந்தது. பங்கு ஒன்றுக்கு இருபத்தைந்து ரூபா விழுக்காடு நாற்பதாயிரம் பங்குகள் சேர்த்தனர். ஜனாப் ஹாஜி முகம்மது பக்கீர்சேட் என்பவர் மட்டும் எண்ணாயிரம் பங்கு செலுத்தினார். அக்கழகத்தில் பதின்மூவர் செயற்குழுவினராயினர். கழகச் சட்ட அறிஞர்களாகச் சேலம் பெரியார் சி. விசயராகவாச்சாரியாருள்பட நால்வர் அமைக்கப் பெற்றனர்.

'நாவாய்ச் சங்கம்' வணிகத்தை மட்டும் குறிக்கொள்ளாமற் கப்பல் தொழிலுக்கு நம் நாட்டினரைப் பழக்கக் கல்லூரிகளும் அமைக்கத் திட்டமிட்டது. பாரத நாட்டினர் மட்டுமின்றி ஆசியாக் கண்டத்தினர் எவரும் இக்கழகத்திலே பயிற்சி பெறலாம் என்னும் முறைசெய்தது.

குத்தகைக் கப்பல்கள் சிலநாட்கள் வரையில் நன்றாகப் போக்குவரத்துச் செய்து வணிகத்தை வளர்த்தன. வெளிநாட்டுக் கப்பற் கழகத்தினரான ஆங்கிலேயர் சுரண்ட வந்தவர்களாகையால், 'சுதேசிய நாவாய்ச் சங்க'த்தின் முன்னேற்றத்தை விரும்பவில்லை. இக்கழகத்துக்குக் குத்தகைக் கப்பல்கள் கொடுத்த கழகத்தாரைக் கலைத்தனர். ஆங்கிலக் கம்பெனியாரும் தூத்துக்குடி வெள்ளையரும் அச்சுறுத்தவே குத்தகைக்குக் கொடுக்க மறுத்துவிட்டது அக் கழகம். சுதேசிய நாவாய்ச் சங்கம் திகைத்தது.

இதுதான் வாய்ப்பென்று போலிச் சுதேசியக்காரர்கள், 'நடக்குமா?' என்று இடித்துக் கூறினர். கழகத்தைக் கூட்டும்போதே சிலர், 'நடத்த அருமையான தொழில் இது! எம்மால் ஆகாது,' என்றனர்.

அவர்களிடம் அடிக்கடி சென்று அன்புற மொழிந்தும் அச்சுறுத்தியும் ஏசியும் அறிவுறுத்தியும் இரவும் பகலுமாக எந்நேரமும் கூறித் திருத்தினார் நம் சிதம்பரனார்; இவ்வாறு தொடங்கப்பெற்ற சங்கத்தைக் கலைத்துவிடுவதா என்று கலங்கினார். கப்பல் வணிகத்திலே வரும் ஊதியத்தைக் கண்ட உறுப்பினர் பலரும் தளர்ச்சியடையாமற் சொந்தக் கப்பல் வாங்கத் தூண்டினர்.

அதற்காகப் பொருள் திரட்டச் சிதம்பரனார் கொண்ட கவலை கூறத்தரமன்று; செய்த முயற்சிகள் செப்புந் திறத்தன அல்ல. பொருளைத் திரட்ட வடநாடு சென்றார். யானைபோன்றது வெள்ளைக் கழகம்! சுண்டெலி போன்றது தூத்துக்குடித் தமிழ் வணிகர் கழகம்! போட்டியிடுவதென்பது பொருத்தமாகவா தோன்றுகிறது? எனினும், சிதம்பரனார் இம்மியும் ஏங்கவில்லை. சிதம்பரனார் பம்பாயில் இருக்கும்போது அவருக்கு அருமையான ஒரே மகன் உலகநாதன் என்பவன் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையாகவே யிருந்தான். வாழ்க்கைத் துணைவியார் நிறை கருப்பவதியாக இருந்தார். அவர்களை ஒருமுறை வந்து பார்த்துப் போகுமாறு நண்பர்கள் கடிதம் எழுதி வேண்டினர். மகனையும் மனைவியையும்விடச் சிறந்தது நாடு என்று எண்ணிய நம் வீரர்மணி இங்கு வர மறுத்துவிட்டார். வட நாடு நோக்கிப் புறப்படும்போதே, "பொருள் தேடும் முயற்சி முடிந்து, கப்பலுடன் திரும்புவேனேயன்றி மாளும் உடல்கொண்டு மீளேன்," என்ற உறுதியுடன் புறப்பட்ட அப் பெருவீரர், **காலியா** என்ற கப்பலுடனேயே திரும்பினார். **எஸ். வேதமூர்த்தி** என்னும் மற்றொரு பெரியார் **லாவோ** என்ற கப்பலை நேரே

பிரான்சிலிருந்து சிதம்பரனார் ஆணைப்படி வாங்கி வந்தார். ஆக, இரு மரக்கலங்கள் தமிழ் வணிகரின் மரக்கலங்களாக நம் நாட்டுக் கடலிலே, வெளிநாட்டாரின் எதிர்ப்பைக் கிழித்துக் கொண்டு விரைந்தன! கூத்தாடிக் கும்மாளமிட்டன.

தமிழ் மக்கள், "வீரர் சிதம்பரனார் வாழ்க!" என ஆரவாரித்துப் புகழ்மாலை சூட்டினர். அரசியல் வாதிகள், "இனி வெள்ளைத் தனியரசு வீழ்ந்தது," என எக்களித்தனர். பாரத நாட்டுப் பத்திரிகைகள் பலபடப் பாராட்டின. அப்போது தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் இந்தியா என்ற வார இதழ் ஒன்றை வெளியிட்டு வந்தார். அவர் அவ்வாரத் தாளில், 'வந்தே மாதரம்' என்ற மறைமொழி பொறித்த கொடியுடன் 'காலியா' கப்பல் தூத்துக் குடித் துறைமுகத்தை அணுகுவது போலவும், தமிழ் மக்கள் பெரியாரும் சிறுருமாகக் குழுமி, 'வீரர் சிதம்பரனார் வாழ்க!' என ஆரவாரித்து வரவேற்பது போலவும் 'கார்ட்டூன்' ஒன்றை வெளியிட்டிருந்தார். மற்றும், நீண்ட காலமாக மகப்பேறின்றி வருந்திய மாதொருத்தி இரு மகவுகளை ஒரே தடவையிற் பெற்றால் அடையும் மகிழ்ச்சியைப் பாரததேவி பெற்றதாகவும் எழுதியிருந்தார்.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் புலிக்கொடியும் விற்கொடியும் மீனக்கொடியுந் தாங்கிய தமிழரின் மரக்கலங்கள் கடலிலே உலவின. இடையிலே வெளிநாட்டாரின் ஆதிக்கத்தால் அடைத்துக்கிடந்த தமிழரின் பழம்பண்பு சிதம்பரனாரின் பெருமுயற்சியால் மீண்டும் புத்துயிர் பெற்று ஒளி வீசியது. தெருத்

தெருவாகவும் சந்தி சந்தியாகவும் வீடு வீடாகவும் சென்று மக்களின் மனத்தை இந்த எதிர்ப்புப் போரிலே திருப்பிய வீரத்தை எப்படிப் புகழ்வது! அக்காலத்திலேயே தமிழ்நாட்டிற் பல சிதம்பரனார்கள் இருந்தால் நாட்டின் வரலாறு அப்போதே வேறு வகையா யிருந்திருக்கும்!

தமிழ்நாட்டுக் கப்பலிலேயே தமிழ்மக்கள் வணிகம் புரிந்தனர்; வெளிநாடு சென்று வந்தனர். சுரண்டல் ஆட்சிபுரியும் வெள்ளையர் இதைக் கண்டு வெருண்டனர். தங்கள் கப்பலின் கட்டணத்தை மிகவும் குறைத்தனர். இந்திய வணிகரிடம் தூதுவிடுத்து இரந்தனர். உள்நாட்டுப் பொருள்கள் தங்கள் மரக்கலங்களிலேயே செல்வதாகப் பொய்ம்மொழி பரப்பினர். சுதேசிய நாவாய்ச் சங்கத்தாரும் எதிர்த்துச் சொன்மாரி பெய்யத் தங்கள் ஆட்களை ஏவினர். நாளுக்கு நாள் தமிழ் மக்களிடையே நம் நாட்டுப்பற்று நன்றாகப் பரவியது. வெள்ளையர் மனமுடைந்தனர். "எங்கள் கப்பலில் யாவரையும் கட்டணமின்றி ஏற்றிச் செல்வோம்," என்றும் அறிக்கை விடுத்தனர். தமிழ் மக்கள் தளரவில்லை.

இவ்வாறு 1906இல் தொடங்கிய சுதேசிய நாவாய்ச் சங்கம் 1907, 1908 ஆகிய இரண்டாண்டுகள் இரு கப்பல்களைக்கொண்டு வெள்ளையரைத் தாக்கும் முறையிலே நன்றாக வணிகம் புரிந்தது; நல்ல ஊதியத்தையும் பெற்றது.

தமிழரின் கப்பல் வணிகம் சிதம்பரனார் செயலாண்மையிலேயே திறம்பட நடக்கிறதென்பதை உணர்ந்த வெள்ளையர், அவரை எப்போது மடக்கலாம்

என்று எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். இதற்கிடையே இலட்சம் ரூபாய் கையூட்டுக் கொடுப்பதாகவும் சுதேசிய நாவாய்ச் சங்கத்தைவிட்டு இவர் விலகும்படியும் மன்றாடிப் பார்த்தனர். உரிமையொன்றையே குறிக்கொண்ட வீர சிதம்பரனாரோ இணங்குவார்? அவர் உள்ளமாகிய இரும்புத் தூணை வெள்ளிச்செல்லால் அரிக்க முடியவில்லை! எனினும், பலவகையினும் இடுக்கண் புரிந்து வந்தனர்.

தம்மால் அமைக்கப்பெற்ற **தருமசங்க நெசவு சாலையும், தேசியப் பண்டகசாலையும்** நலம்பெற நடக்க வேண்டியும் சிதம்பரனார் முயற்சி செய்யாமல் இல்லை. சென்னையில் திரு. வி. சர்க்கரைச் செட்டியாரின் தலைமையில், '**சுதேசிப் பிரசார சபை**' ஒன்றை நிறுவிப் பிரசாரம் செய்வித்தார்.

**வீரப் பேருரையாளர்**

திலகரைத் தலைமையாகக்கொண்டு வடக்கே வங்கப் பிரிவினையை எதிர்க்கும் இயக்கத்தாலும் தமிழ் நாட்டிலே சுதேசிய நாவாய்ச் சங்கம் ஆங்கில வணிகத்தைத் தளர்த்துவதாலும் ஆங்கில அரசாங்கம் அச்சமுற்றது. ஆகையினால், வெள்ளை வணிகக் குழுவினர் சார்பாக அரசாங்கம் வேலைசெய்தது. சுதேசிய நாவாய்ச் சங்கத்தைத் தகர்க்க வாய்ப்பை நாடியிருந்தது.

தென்னாட்டில் **வத்தலக்குண்டில்** பிறந்து, ஆங்கில மும தமிழும் அறிந்த **சுப்பிரமணிய சிவா** என்னும் துறவியொருவர் வீரர் சிதம்பரனாருக்குத் துணையாக வாய்த்தார். இருவரும் காற்றும் நெருப்புமெனக் கலந்து பொதுமக்களின் அடிமைப்பண்பை அழிக்க

முற்பட்டனர். இருவருடைய சொற்பொழிவையுங் கேட்கப் பொதுமக்கள் திரண்டுவந்தனர். சுதேசிய நாவாய்ச் சங்கச் செயலாளரான சிதம்பரனாருக்கு அப்போது முப்பத்தைந்து அகவை நிரம்பவில்லை. சுப்பிரமணிய சிவா இருபத்து மூன்று அகவை நிரம்பாத இளந்துறவி. இருவருடைய ஊக்கமும் பேச்சும் வெள்ளை வணிகரின் கொடுமையிற் குமைந்து கிடந்த ஊர்வியில் தொழிலாளர்க்குப் புத்துணர்ச்சியை உண்டு பண்ணின.

அப்போதிருந்த காங்கிரசுப் பேரவை செல்வர்களிடமும் படித்த வழக்கறிஞரிடமுமே அகப்பட்டிருந்தது. பொதுமக்களும் உணரும் நிலையில் அஃது இல்லை. அவ்வாறிருந்தும் தென்னாட்டிலே இவ் விருவருடைய முயற்சியால் பொதுமக்களும் வெள்ளையரின் சுரண்டலை உணர்ந்து காங்கிரசிலே ஊக்கம் கொண்டனர்.

உள்நாட்டுப் பொருள்களின் விலை வெளிநாட்டுப் பொருள்களின் விலையைவிட மிகுதிதான். எனினும் அப்பொருளால் வரும் ஊதியம் உள்நாட்டுத் தொழிலாளரிடமே சேர்கிறதென்பதைச் சிதம்பரனார் நன்றாக எடுத்துரைத்தார். "இந்தியர்கட்கு ஆளத்தெரியாது. ஆகையால், அரசாட்சியை அவர்களிடம் ஒப்படைத்தல் ஒவ்வாது," என்றனர், ஆங்கிலேயரும் அவர்களின் கையாட்களும். அவர்கள் வாயை அடைக்கத், "தண்ணீரில் இறங்கித்தானே நீந்தக் கற்றுக்கொள்ள வேண்டும்! இறங்காமலே கற்றுக்கொள்ள முடியுமா?" என்று கூறினார் சிதம்பரனார்.

இவ்வாறு, தூத்துக்குடியில் சுதேசியக் கிளர்ச்சி, அரசியல் கிளர்ச்சியாக மாறத்தொடங்கியது கண்ட

அரசாங்கத்தார், "எவரும் எவ்வகைப் படைக்கருவியும் தடியும் வைத்திருக்கலாகாது," எனத் தடுத்தனர். அதுகேட்ட சிதம்பரனுர் சீறினர்.

"ஆங்கிலேயர் நம் கையில் இருக்கும் தடியைக் கண்டாலும் அஞ்சுகின்றனர். படையும் கருவியும் உடைய அரசாங்கத்திற்கு இதைவிட மானக்கேடு ஏது? எனினும், நீங்கள் தடியைக் கீழே போட வேண்டாம். இதையும் விடத்தக்க நிலையில் அஞ்சினுல், உங்களின் வழித்தோன்றல்கள் பறங்கியரின் உள்ளங்கால்களை நக்க நேர்ந்தாலும் நேரலாம்!"

என்று சூடுகொடுத்து அரசாங்க ஆணையை மீறத் தூண்டினர்.

வெள்ளையரிடம் பாரதநாடு அடிமைப்பட்டுக் கிடப்பதைக் கண்ணீர் பெருக எடுத்துரைப்பார். மக்களின் மனம் அழலின்மெழுகென உருகும். சீற்றத்தோடு, "9,600 கி. மீக்கு அப்புறம் இருக்கும் சிறு குழுவினர்க்கு முப்பதுகோடி மக்கள் அடங்கிக் கிடப்பதா?" என்பார். மக்கள் மனத்துடிப் படைவர். அவருடைய பேச்சிலே தொழிலாளர் பெரிதும் ஈடுபட்டனர். ஒவ்வோரூரிலும் தெருவிலும் பேசிப்பேசிப் பேதை மக்களை அறிஞராக்கினுர் சிதம்பரனுர். மக்களிடம் அடிமை யுணர்ச்சி அற்றது! உரிமை உணர்ச்சி ஓங்கியது!

**பேச்சுரிமைத் தடை**

வடநாட்டில் **விபின சந்திரபாலர்** என்பவர் காங்கிரசின் முதல்வர்களில் ஒருவராயிருந்தார். புதுவை

யில் எழுந்தருளியிருந்த பெரியார் **அரவிந்த கோஷ்** அவர்களும் அப்போது காங்கிரசின் முதல்வர்களில் ஒருவர். அவர்மீது அரசாங்கத்தார் நடத்திய 'சதி வழக்கு' ஒன்றில் அரசாங்கச் சார்பாகச் சான்றுகூற விபின சந்திரபாலர் அழைக்கப்பெற்ருர். விபினசந்திரர்க்கு அரவிந்தர்மீது தவருன சான்றுகூற விருப்பமில்லை; அதனுல் அவர் அரவிந்தர்க்கு ஆதரவாகவே சான்று கூறினுர். ஆகவே, அரசாங்கம் அவருக்கு ஆறு திங்கள் சிறை விதித்தது!

விபினசந்திரரின் சிறைவாசம் 1908ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9ஆம் நாளுடன் முடிவெய்தியது. வீரரான விபினசந்திரரின் விடுதலைநாளைத் திருநெல்வேலி மாவட்டம் முழுதுங் கொண்டாட வேண்டுமென மக்கள் விழைந்தனர். அரசாங்கம் அதனை விரும்பவில்லை. ஆகவே, 'விபினசந்திரரின் விடுதலை நாளன்று ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெறலாகாது,' என்ற தடைக் கட்டளை பிறந்தது.

சிதம்பரனுரும் சிவாவும் கூடி **'சுயராச்சியம்'** என்றெரு தாளை விபினசந்திரரின் விடுதலை நாளன்று வெளியிடுவதெனமுடிவு செய்தனர். அதன் ஆசிரியராகப் பரலி. சு. சண்முக சுந்தரனுரை அமைத்தனர். அதன் சார்பாகச் சொற்பொழிவுகள் பல நடைபெற்றன. ஒவ்வொருவர் வீட்டிலும் 'சுயராச்சியம்' ஒளிபெற வேண்டுமெனத் தலைவர்கள் உன்னினர். இதற்கு ஆதரவும் மிகுதியாயிருந்தது. 'ஆதரவு தருவோர் தம் வீட்டிற்கெதிரிலே சுயராச்சியக் கொடியை உயர்த்தவேண்டும். அக் கொடியைக் கண்டு ஆதரவை அறிந்துகொள்ளலாம்'', என்று அவர்கள் அறிக்கை விடுத்தனர்.

தூத்துக்குடியில் இருந்த வெள்ளையர் இந்த ஏற்பாட்டையெல்லாம் சுயராச்சிய முழக்கம் என்றெண்ணிக் கொண்டனர். சிதம்பரனாரின் செயலையெல்லாம் உடனுக்குடன் அரசாங்கத்திற்கு அறிவித்து வரும் இவர்கள் தாம் கருதியவாறே இதனையும் எழுதி விடுத்தனர். இந்நிலையில், 'ஹார்வி மில்' தொழிலாளரும் வேலைநிறுத்தம் செய்திருந்தனர். அவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியமில்லை! உழைப்பின் சோர்வைப் போக்க ஓய்வு இல்லை. இவற்றையெல்லாம் ஒழுங்காகக் கொடுக்கவேண்டும் என்பதே தொழிலாளரின் விருப்பம். இவ்விருப்பத்தை அவர்கள் உள்ளத்தில் ஊட்டியவர் சிதம்பரனாரேயாவர்.

ஆகவே, சிதம்பரனாரும் சிவாவும் வீபினர் விடுதலையன்று பொதுக்கூட்டங் கூட்டிப் பேசலாகாதென்று அரசாங்கம் விரும்பியது. ஆஷ் என்னும் பெயரையுடைய வெள்ளையனை முறை மன்ற நடுவர் (ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டு) தூத்துக்குடிக்கு வந்தான். சிதம்பரனாரை நேரில் வந்து பார்க்கும்படி ஆணை அனுப்பினான். நண்பர்கள் அஞ்சினர். உயிர்க்கே ஊறு நேரினும் நேருமென்று கூறித் தடுத்தனர். சிதம்பரனார் நகைத்தவாறே, "செல்லாதிருப்பினும் அரசாங்க ஆணை விடாதன்றோ? சென்றே துன்பத்தை ஏற்பேன்," என்று சென்றார்.

ஆஷ்துரை, 'ஹார்விமில்' தொழிலாளர் வேலைநிறுத்தம்பற்றி வினவினான். "பல கொடுமை புரிந்து, சாகும்படி வருத்தியதனால் வேலைநிறுத்தம் புரிந்தனர். அவர்களுக்கு வேண்டும் நலன்களை 'ஹார்விமில்' தலைவர்களிடம் வினவியுள்ளேன். இன்னும் நான்கு

...டகளில் நலமாகும்," என்றார். "நன்று! விபினர் விடுதலை நாளன்று கொண்டாட்டம் கூடாது. நீரும் சிவாவும் கொண்டாட்டங்களிற் கலந்துகொள்ளக் கூடாது," என்று தடைக் கட்டளையை எழுதி நீட்டினன் நடுவர் (மாஜிஸ்டிரேட்டு). இவர் வாங்கிக் கொண்டு வந்துவிட்டார்.

ஹார்விமில் முகவர் தொழிலாளர் ஊதியத்தை அரைப்பங்கு மிகுதி செய்தும், ஞாயிறு விடுமுறை நல்கியும், வேலைநிறுத்த நாட்களைத் தொழில் செய்த தாக ஏற்றும், தொழில் செய்வோர்க்கு இடையிலே வேண்டியிருந்தாற் கூலியின்றி விடுதி (லீவு) நல்குவ தாகவும் ஒப்பந்தங்கள் கூறி, 'ஹார்வி மில்லின்' கூட்டாளிகளில் ஒருவரான சுப்பிரமணியனரிடம் சொல்லியனுப்பினன். சிதம்பரனார் ஒப்புக்கொண்டு, தொழிலாளரை வேலைக்குப் போமாறு செய்தார். எனினும், விபினர் விடுதலை விழாவை நடத்தவே உறுதிபூண்டார்.

சிதம்பரனார் அரசாங்க ஆணையை மீறி விபினர் விடுதலை விழாவிற் கலப்பது சுதேசிய நாவாய்ச் சங்க உறுப்பினர்க்கு விருப்பமில்லை. அவ் வுறுப்பினரிற் பலர் தந்நலக்காரர். முன்னரே சிதம்பரனார் சங்கத் தின் வாயிலாகப் புகழ்பெறுவதை விரும்பாமல் முணுமுணுத்தவர்கள் அவர்களுடைய பொறாமைக் காய்ச்சலை உணர்ந்த சிதம்பரனார் சங்கத்திலிருந்து பிரிந்துவிடவும் விரும்பினர். சிறந்த சில நண்பர்களின் வற்புறுத்தலினலேயே விலகாமல் இருந்தார். தமிழர் கள் மரக்கலம்விட விரும்பி உழைத்துக் கழகத்தை நிறுவியவர்க்குப் புகழ் வராமல் இருக்குமா? அவ

ருடைய முயற்சியைப் பாராட்ட வேண்டுவதன்றோ துணைபுரியும் உறுப்பினர் கடன்? தந்நலம் கொண்ட தமிழர்களாலேயே நாடு சீர்கேடடைகிறது.

மேலே குறிப்பிட்ட தந்நலப் பேராசையாளர்கள் இப்போதும் நாட்டுப்பற்றை நசுக்க அரசாங்கத்தார்க்குத் துணைபுரிந்தனர். 'சிதம்பரனார் விபினர் விடுதலை விழாவிற் கலப்பது சுதேசிய நாவாய்ச் சங்க உறுப்பினர்க்கு விருப்பமில்லை,' என அரசாங்கத்திற்கு அறிவித்துவிட்டனர். சிதம்பரனாரையும், "நீர் நம் சங்க அழிவிற்குக் காரணமான இத்தகைய செயல்களில் ஈடுபடக்கூடாது," என்று தடுத்தனர். நண்பர்களிற் சிலரும், "நன்றாக வளர்ந்துவரும் சுதேசிய வணிகத்தின் அளவிலேயே நம் தொண்டு இருக்கட்டுமே," என்று கூறினர்.

சிதம்பரனார்க்கு இவர்களின் போக்குச் சற்றும் பிடிக்கவில்லை. தமிழ் மக்களை வெள்ளையர் அடக்கி உரிமையைப் பறிக்கும் இழிவைத் தடுக்கவே விரும்பினார். ஆகையால், நாட்டுப் பற்றெனும் போர்வையில் தந்நலத்தை வளர்க்கும் வஞ்சகச்செயலை அறவே வெறுத்தார்.

அரசாங்க ஆணையை மீறியே விபினர் விடுதலை விழா மார்ச்சு 9ஆம் நாள் மிகச்சிறப்பாக நடந்தது. சிதம்பரனாரும் சிவாவும் அவ் விழாவை நடத்தினர். ஆனால், 'சுயராச்சியம்' என்னும் இதழ் மட்டும் வெளிவரவில்லை.

---

## ௯. நாட்டுப்பணிக்குப் பரிசு

*சிறை வீரர்*

### 'வீரரைக் கைதி'

அரசாங்கத் தடையைமீறி எவ்வகைக் குழப்பமும் இன்றி விபினர் விடுதலை விழாவை மக்கள் கொண்டாடியதைக் கண்டு அரசாங்கம் அஞ்சியது. எனவே, சிதம்பரனாரையும் சிவாவையும் சிறைப்படுத்தச் சிந்தித்தது. உடனே விஞ்சு எனும் வெள்ளைக் கலெக்டர் திருநெல்வேலியில் இருந்துகொண்டு இவ் விருவரையும் வருமாறு கட்டளையிட்டான். தூத்துக்குடிக்கு வந்தால் இடையூறுண்டாகுமென்று அவன் உணர்ந்தான். அவன் ஆணைப்படி சிதம்பரனாரும் சிவாவும் சென்றனர். அங்கே சிதம்பரனார்க்கும் விஞ்சு துரைக்கும் நடந்த உரையாடலைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பாட்டாகப் பாடியிருக்கிறார். அப்பாட்டை உரையாடல் முறையில் இங்கே பார்ப்போம் :

(தண்டகம்—ஆதிதாளம்)

**விஞ்சு:** நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய்!—கனல்—மூட்டினாய்!
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்—வலி—காட்டுவேன்.

**சிதம்:** சொந்த நாட்டிற் பரர்க்கடி மைசெய்தே
துஞ்சிடோம்—இனி—அஞ்சிடோம்
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ?—தெய்வம்—பார்க்குமோ?

**விஞ்சு:** கூட்டங் கூடிவந் தேமா தரம்என்று
கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்
ஓட்டம் நாங்கள் எடுக்கவென் றேகப்பல்
ஓட்டினாய்—பொருள்—ஈட்டினாய்

சிதம் : வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்—முடி—தாழ்த்துவோம்
எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ?—அவ—மானமோ?

விஞ்ச : கோழைப் பட்ட சனங்களுக் குண்மைகள்
கூறினாய்—சட்டம்—மீறினாய்
ஏழைப் பட்டிங் கிறத்தல் இழிவென்றே
ஏசினாய்—வீரம்—பேசினாய்.

சிதம் : பொழுதெல் லாம்எங்கள் செல்வம் கொள்ளைகொண்டு
போகவோ?—நாங்கள்—சாகவோ?
அழுது கொண்டிருப் போமோ? ஆண் பிள்ளை
அல்லமோ?—உயிர்—வெல்லமோ? [கள்

விஞ்ச : அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்—புன்மை—போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய்—ஆசை—ஊட்டினாய்.

சிதம் : நாங்கள் முப்பது கோடி சனங்களும்
நாய்களோ?—பன்றிச்—சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ? இது
நீதமோ?—பிடி—வாதமோ?

விஞ்ச : தொண்டொன் றேதொழி லாக்கொண் டிருந்
தூண்டினாய்—புகழ்—வேண்டினாய் [தோரைத்
கண்ட கண்டதொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய்—சோர்வை—ஓட்டினாய்.

சிதம் : பார தத்திடை அன்பு செலுத்துதல்
பாபமோ?—மனத்—தாபமோ?
கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ?—இதில்—செற்றமோ?

**விஞ்சு :** எங்கும் இந்தசுய ராஜ்ய விருப்பத்தை
ஏவினாய்—விதை—தூவினாய்
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
செய்யவோ?—நீங்கள் — உய்யவோ?

**சிதம் :** ஒற்று மைவழி ஒன்றே வழியென்ப(து)
ஓர்ந்திட்டோம்—நன்கு—தேர்ந்திட்டோம்
மற்றும் நீங்கள் செய்யுங்கொடு மைக்கெல்லாம்
மலைவுறோம்—சித்தம்—கலைவுறோம்.

**விஞ்சு :** சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன்—குத்திக் —கொல்லுவேன்
தட்டிப் பேசுவோர் உண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன் —பழி—கொள்ளுவேன்.

**சிதம் :** சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்எண்
சாயுமோ?—சீவன்— ஓயுமோ? [ணம்
இதயத்துள் ளேஇலங் கும்மகா பத்தி
ஏகுமோ?—நெஞ்சம்—வேகுமோ?

இப்பாட்டுக்களில் உள்ள பொருள் வெளிப்படை. கலெக்டர் 'விஞ்சு' வின் கொடுங்கோன்மை வினாக்களையும் அவற்றிற்குச் சிதம்பரனார் அஞ்சாது விடுத்த விடைகளையும் பாருங்கள். வெள்ளையர் நம்மவரை எங்ஙனம் நடத்தினரென்பதற்குச் சான்று இது ஆகும்.

சிதம்பரனார் தாம் செய்தவை யாவும் சட்ட வரம்பை மீறினவை அல்ல என்பதை நன்றாக எடுத்து விளக்கினார். இந்தியரை அடிமைகளென்றே மதித்த வெள்ளையனான விஞ்சு அவற்றை ஆராயவே யில்லை. சிதம்பரனாரையும் சிவாவையும் மக்கள் கொண்டாடுவதைக் கண்டான். தம் மன்றின் (கோர்ட்டின்) சுவரிலேயே 'வந்தே மாதரம்' எழுதப்பட்டிருந்ததைக்

கண்டான. ஆகவே, சிதம்பரனாரை அடக்காவிட்டால் 'சுயராச்சிய' முயற்சி மிகுந்துவிடும் என்பதையும் வெள்ளையர் ஓடவேண்டியதுதான் என்பதையும் உணர்ந்தான்.

ஆகவே, அவன், "நாட்டின் நிலையைச் சிதைத்து விட்டீர்கள். இனிமேற் கெடுதி வருமென்று உணர் கிறேன். பிணை (ஜாமீன்) கொடுக்க முடியுமா?" என்று வினவினான்.

சிதம்பரனார், "எங்களைச் சிறையிட நினைத்து விட்டீர். எனினும், எங்கள் வழக்கை அடுத்த நீதி மன்றத்தில் மாற்ற இணங்கினால், பிணை கொடுக் கிறோம்," என்றார்.

விஞ்சு துரை சிறிதும் சிந்தியாமல் முன் கூறிய தற்கு முரணாகவே, "மறுபடியும் விசாரணை நடக்கும் வரையிற் சிறையில் இருங்கள்," என்றான்.

சிதம்பரனாரின் வழக்கு நடைபெறும்போது அற மன்றத்தின் முன்பும் அருகிலும் தெருவிலும் எள்விழ இடமின்றி நிறைந்த மக்கட்குழுவைக் கண்ட சிதம்பர னார், "சுதேசியத்தைக் காப்பற்றுங்கள்," எனக் கூறிய வாறே சிறைக்கூடத்துத் தாழ்வாரத்தில்' நின்றார். அவரைக் காண வந்த மக்களின் குழு அளவுகடந்து நின்றது. சிதம்பரனாரிடம் வரங்கேட்க வருவார் போலத் துப்பாக்கியுடன் காவலர் மக்கட் கடலைக் கிழித்து வந்தார்கள். வந்த காவலருடன் பாளையங் கோட்டைச் சிறையைச் சிதம்பரனாரும் சிவாவும் அடைந்தனர். அவர்களுடன் பதுமநாபன் என்பவர் ஒருவரும் விபினர் விடுதலை விழாவிற் கலந்து கொண்ட தாகச் சிறையிடப்பட்டார்.

இம்மூவரும் சிறைச் சாலையை அடைந்தவுடன் சிறைக் காவலன், "ஞாயிறு தோன்றியது முதல் உங்களைக் காண எதிர்பார்த்திருக்கிறோம். வருக! வந்து அறிவுடன் இருக்க!" என்றான்.

சிதம்பரனார், "நன்று! நீரும் மனமும் மொழியும் ஒத்து நடந்தால் அங்ஙனமே இருப்போம். சொந்த உணவிற்கு என் சொல்கிறீர்?" என்றார். "சிறைக் கண்காணியாரிடம் செப்புக!" என்றான் காவலன்.

சிதம்பரனார் அங்குச் சென்று விரைப்பாக நின்றார். கண்காணியார் சிதம்பரனாரை உற்று நோக்கினார்; "நீர் கைதியாகக் காணப்படவில்லையே," என்றார். சிதம்பரனார், "நீர் கூறியது உண்மையாக இருக்கட்டும்: நான் கூறவந்ததைக் கேளும்," என்றார்.

அவர் மேலுங் கீழும் பார்த்தவாறே, "என்ன?" என்றார். "சொந்த உணவிற்குச் சொல்லும்," என்றார் சிதம்பரனார். 'சரி' என்றார் கண்காணியார். சிதம்பரனாரின் உறவினர் சண்முகசுந்தரனார் என்பவர் கண்காணியாரின் பார்வையில் உணவு கொண்டுவந்து கொடுத்தார். சிவாவும் அவரும் உண்டனர். அன்றிரவு அவர்கள் சிறைப் படுக்கையிலேயே படுத்திருந்தனர்.

மறுநாட் காலையில் தோசையும் மிளகாய்ப் பொடியும் காப்பியும் கிடைத்தன. சொந்த உணவாக. நண்பகலுக்குப் பிறகு, 'திருநெல்வேலி போர்க்களமாயிற்று' என்று கூறியவாறு 'காப்பாளர்கள்' சிறைக் கதவைச் சிறையாளரை உள்ளே விட்டுப் பூட்டிவிட்டனர்.

பிற்பகலிற் சிதம்பரனாரின் நண்பர் குருநாதன் என்பவர் சிறைக்குக் கொண்டுவரப்பட்டார்.

அவர், "மக்களெல்லோரும் கூடி ஆட்சியாளரின் அலுவல் அகங்களைத் தீயால் எரித்தனர். 'விஞ்சு' பிழை செய்யாத சிலரைத் துப்பாக்கியாற் சுட்டுத் தள்ளினான்," என்றார். பிறகு மேலும் அவர் கூறியதாவது:—

"நீங்கள் மூவரும் சிறைக்கு வந்த பிறகு, நான் வீரராகவபுரம் சென்றேன். அங்குள்ள மாணவர்கள் ஒன்று கூடி, 'அன்பர்கள் சிறையில் அடைபட்டுள்ளனர்! அடையின் கதவை,' என்று ஆரவாரித்துச் சென்றனர். கடைகள் மூடப்பெற்றன. நானும் அவர்களுடன் கூடிக் கதவடைக்கச் சொன்னேன். பிறகு, தூத்துக்குடிக்குச் சென்றேன். அங்கும் பல கூட்டங்கள் நடந்தன. அவர்களுடன் நானும் கூடினேன். நாங்கள் ஆள்வோர் செய்யும் அடாச்செயலைக் கண்டித்துப் பேசினோம். அப்போது, 'ஆஷ்' என்னும் குற்ற நடுவர், காவலருடன் தோன்றித் தடியடியாலும் துப்பாக்கி வெடியாலும் கலைத்தான். துப்பாக்கியாற் சுட்டதனாற் குற்றமற்ற நான்குபேர் இறந்தனர். பொதுமக்கள் வெகுண்டு, 'ஆஷ்' குதிரையை அடித்துத் தள்ளிவிட்டனர். அவன் அஞ்சி ஓடிவிட்டான். காவல்துறை துணைக் கண்காணிப்பாளரை (போலீஸ் சப் இன்ஸ்பெக்டரை) அடித்து மிதித்தனர். காவல் நிலையங்கள் எரிந்தன. துப்பாக்கிகளைத் தூள் தூளாக்கினர். இவ்வாறு அளவு மீறிய மக்களின் வெகுளிச்செயலைக் கண்டு காவலர் தலைகாட்டவில்லை.

வெள்ளையர் அங்கங்கே மறைந்துவிட்டனர். படைத்துறைக் காவலர் வந்துதான் திருநெல் வேலி, தூத்துக்குடி முதலான இடங்களில் அமைதி செய்தனர்."

இவ்வாறு குருநாதன் கூறியதும், மாலையில் இந் நால்வரையும் காக்கப் பல படைக் காவலர்கள் வந்தனர். அவர்கள், "நீங்கள் அரசாங்கத்தை அழிப்பீர்கள் என்று சென்னை ஆளுநருக்குத் 'தந்தி' போயிருக்கிறது. அங்கிருந்து ஆணைவந்ததும் நாடு கடத்தப்படுவீர்கள்," என்றியம்பினர்.

அவ்வுரை கேட்ட சிதம்பரனாரும் அவருடைய நண்பர்களும், "ஆட்சியையிழந்த நாங்கள் அயலார் ஆட்சியில் மாட்சியை அடைவோமோ? அவ்வாறு மறந்தும் நினையோம்," என்று புன்முறுவலுடன் புகன்றனர்.

இருநாட்கள் கழிந்தன. ஒருநாள் பிற்பகலிற் பன்னிருவர் தடியேந்திவரச் சிறைக் காவலன் வந்தனன். இவர்கள் அறையை ஆராய்ந்து பார்த்தான். அவன் வரும்போது, சிதம்பரனார் ஒரு திண்ணையில் அமர்ந் திருந்தார். சிறைக்காவலன் அவர் அமர்ந்திருப்பதைக் கண்டு சீறினன். "நான் நின்றிட நீ இருக்கலாமா?" என்றான். "இருக்காமல் என்செய்வது? இச்சிறையை விட்டுச்செல்ல விதி வரவில்லையே!" என்று குறும்பாகக் கூறினார் சிதம்பரனார். அவன் ஒன்றும் உரைக்க முடியாமல் அவர் உடுத்திய ஆடைகளையும் ஆராய்ந்து பார்த்துவிட்டுப் போய்விட்டான்.

பிறகு, பலநாள்வரையில் இவருடைய மைத்துனர் பிச்சையாபிள்ளை என்பவர் உணவு கொண்டுவந்து

கொடுத்தார். சிதம்பரனாரின் மனைவியும் ஐந்தாண்டு நிரம்பிய மகனும் பாளையங்கோட்டையிற் சண்முகம் என்பவரின் வீட்டிலே இருந்துகொண்டு, வாரம் ஒரு முறை வந்து பார்த்துச் செல்வர்.

சிதம்பரனாரின் புலிக்குட்டியனைய சிறுவன் தான் இருந்த வீட்டிலே சிறுவரைக் கூட்டிக்கொண்டு, "இது நம் நாடு. இதிலுள்ள பொருள்களெல்லாம் நம்முடைய பொருள்கள். இனி, வெள்ளையரை வெருட்டுவோம்," என்று கூறி விளையாடுவான். பெற்றோரின் பண்பு ஊறிய பிள்ளை வேறு எங்ஙனம் இருப்பான்? 'புலிக்குப் பிறந்து பூனையாவது உண்டோ?'

இவ்வாறு சிறுவன் விளையாடுவதைப் பெரியோர் கண்டு மகிழ்ந்தனர்; காவலர் கேட்டு வெருண்டனர். காவற் கண்காணியாளர் வெகுண்டு சிதம்பரனாரின் மனைவியும் சிறுவனும் அவ்வீட்டில் இருத்தல்கூடாது என்று வீட்டுக்காரருக்கு ஆணையிட்டான். ஆகவே, சிதம்பரனாரின் மனைவியும் சிறுவனும் அருகிலுள்ள குலமாணிக்கபுரம் என்னும் ஊரிலுள்ள கோயிலில் தங்கினர். ஐந்து வயதுக் குழவியைக் கண்டு ஆள்வோர் அடைந்த அச்சந்தான் என்னே!

இவர்கள் சிறையில் இவர்களூர் அம்பட்டனும் வந்திருந்தான். அவன் தூத்துக்குடிக் கலக வழக்கிற் சேர்க்கப்பட்டுக் குருநாதனுடன் வந்தவன். அவனே விசாரணைக் கைதிகளாக இருந்த இவர்கட்கு முகச் சவரம் செய்துவிட்டான்! என்னென்பது அப்போதிருந்த தூத்துக்குடியின் நாட்டுப்பற்றை! கலகக்கைதிகளாக எண்பத்தொன்பது பேர் சிறைப்பட்டனர். எண்ணெய் முழுக்குக்கும் எளிதில் ஒப்புக்கொள்ள

வில்லை இறுமாந்திருந்த மேற்பார்வையாளர்! விசாரணைக் கைதிகளையும், திருட்டுக் கைதிகளையும் ஒன்று போல் நடத்தும் உயர்ந்த நோக்கமன்றோ அது?

அவர்களுக்கு வெளியுலக நிகழ்ச்சிகளை அறியவும் உரிமை நல்கவில்லை அந்த மேற்பார்வையாளர்! அவனறியாமலே ஆங்கிலத்தில் 'இந்து'வும், தமிழில் 'வந்தே மாதர'மும், 'சுதேசமித்திர'னும் வரவழைத்துப் படித்தனர். அவன் கட்டளை பெற்றுத் 'திருக்குறள்' படித்தார் சிதம்பரனார். மேலும், அக்காலத்தில் நாட்டுப் பாடல்களாகக் 'கட்டபொம்மு' வரலாறு பொது மக்களிடையே பரவியிருந்தது. அதனைச் சிறைக் கைதிகளிற் சிலர் பாடுவர். சட்டமும் நம் சிதம்பரனார் அப்போது படித்தார்.

பொழுதுபோக்காக 'நாயும் புலியும்' என்னும் விளையாட்டையும், 'தாயமும்' ஆடினர். 'கசரத்'தும், 'பஸ்கி'யும் உடற்பயிற்சிகளாக உற்றிருந்தன. சில காப்பாளர்கள் அடிக்கடி வந்து பாடியும் பணிபுரிந்தும் வந்தனர்.

சிதம்பரனாரின் அன்புக்குகந்த சாது கணபதி என்பவர், பெரிய வழக்கறிஞரொருவரின் உதவியால், சென்னை 'உயர்மன்ற' அறத்தலைவரிடம் (ஜட்ஜ்) ஜாமீனில் சிதம்பரனாரை விடுமாறு கட்டளைபெற்றுப் பாளையங்கோட்டைச் சிறைச்சாலைக் கனுப்பினார். மேற்பார்வையாளர் அதனை மறைத்துவைத்தார். இதற்கிடையிலே கலெக்டர் 'விஞ்சு' சென்னை ஆளுநருக்குத் தந்தி விடுத்துச் சிதம்பரனார் மேலும், அவருக்குற்ற நண்பர்மேலும் 'அரச நிந்தனை' இருப்பதாக வழக்குத் தொடுக்க ஆணை பெற்றார்.

**வழக்கு விசாரணை**

மார்ச்சுத் திங்கள் 26ஆம் நாள் 'அரச நிந்தனை' வழக்கு திருநெல்வேலி மிகைக் குற்ற நடுவர் (அடிஷனல் மாஜிஸ்டிரேட்டு) ஈ. எச். வாலேஸ் முன்பாக நடந்தது.

பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து 11 மணிக்குப் பதுமநாபரையும் குருநாதரையும் சேர்க்காமல், இவர்கள் இருவரை மட்டும், ஒவ்வொரு குதிரை வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்றனர் காவலர்கள். முன்னும் பின்னும் காவல்துறை துணை மேற்பார்வையாளர்களும், கண்காணியர்களுமாக உடன் வந்தனர். வண்டியின் இடப்பக்கத்தும் வலப் பக்கத்தும் பன்னிரு தலைமைக் காவலர்கள் வந்தனர். அவர்களிடம் சுழல் துப்பாக்கிகளும் துப்பாக்கிகளும் இருந்தன. வழி நெடுக மக்கள் மொய்த்திருந்து இருவரையுங் கண்டு கண்கலங்கி நின்றனர்.

கலெக்டர் விஞ்சுவின் அலுவலகத்திற்கு வண்டிகள் சென்றன. அவன் ஈ. எச். வாலேஸ் முன்பு இவர்களைக் காவலருடன் செலுத்தினான். இவ்வாறான ஒழுங்குடன் வழக்கெடுத்துக் கொள்ளப் பெற்றது.

1908ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23, 26ஆம் நாட்களிலும், மார்ச்சுத் திங்கள் 1, 3ஆம் நாட்களிலும் அரசநிந்தனை பேசியதாகவும், சுப்பிரமணிய சிவாவுக்கு இடமும் உணவும் நல்கியதாகவும் சிதம்பரனார்மீது வழக்குத் தொடர்ந்தனர் அரசாங்கத்தார்.

சிதம்பரனாரின் சொற்பொழிவுகளில் ஏற்கத் தகாதவைகளெனக் குறிப்பிடப்பட்டவை :—

"மக்கள் ஒன்றுகூடினால் வெள்ளையரை விரட்டி விடலாம். நாம் எல்லோரும் ஒன்றுபட்டோமென்றால் அவர்களே சென்றுவிடுவார்கள்."

"பாரத நாட்டில் உள்ள வெள்ளையரின் எண்ணிக்கை ஐம்பதாயிரமே. ஆகையால், நாம் அவர்களை வற்புறுத்தி வெளியேற்றலாம். எனினும், நாம் அவர்களை வலுக்கட்டாயஞ் செய்தல் வேண்டாம். ஆனாலும், அவர்கட்கு அஞ்சவும் வேண்டாம்."

"இந்தியர்கள் தாங்கள் உறுதிசெய்தவாறு வெளிநாட்டுப் பொருள்களை வாங்காமல் இருந்தால், வெள்ளையர்கள் தாங்களே வெளியேறுவர்."

"இன்னும் வெள்ளைக் 'கம்பெனிக்குத் துணை செய்யும் நம்மவர்கள் இருக்கிறார்கள். எனினும், அவர்களுக்குக் கேடுசூழ்தல் வேண்டாமென என் நண்பர்களுக்குக் கூறினேன். ஆனால், அவர்களோ எது நேரினும் கெடுதி செய்வதாகவே சாலவும் உறுதியுடன் உள்ளனர்."

"சவரத் தொழிலாளரெல்லோரும் இனி வெளி நாட்டாடை யணிந்தவர்க்குப் பணிபுரிவதில்லை யென்று உறுதி யளித்துள்ளனர்"

"உரிமை யாட்சியைத்தவிர வெளியாராட்சியை விரும்புவோர் யார்? எதுவரினும் வருக! அஞ்சற்க!"

இவ்வாறு சொற்பொழிவு செய்து மக்களைக் கலைத்ததாகக் குற்றஞ் சாட்டினர் அரசாங்கத்தார். விசாரணை

முடிந்தவுடன் வழக்கு முறைவர்க் குழு மன்றத்துக்கு மாற்றப்பட்டது.

முறைவர்க் குழு மன்றத்தில் நடுவர் பின்ஹே முன்பு, இரு திங்கள் வரையில் வழக்கு ஆராயப் பட்டது. சிதம்பரனுர்க்கு வழக்கறிஞராகத் திரு. சடகோபாச்சாரியார், நரசிம்மாச்சாரியார், வேங்கடாச் சாரியார் என்போர் மன்றேறினர். அரசாங்க வழக்கறி ஞர்களாகப் 'பாரிஸ்டர்' 'பவர்' 'ரிச்மெண்டு' என்போர் வந்திருந்தனர்.

சிதம்பரனுரின் சார்பாகக் கவிஞர் பாரதியார் போன்ற பெரியோர்கள் சாட்சி கூறினர். அரசாங்கத் திற்குக் காவலர்களே சான்று புகன்றனர்; வெள்ளைக் கம்பெனி முதலாளிகளும் கரைந்தனர்.

**தண்டனை**

ஜூலைத் திங்கள் 7ஆம் நாள் முறை மன்ற நடுவர் முடிவு அளித்தனர். சிதம்பரனுர் அரசநிந்தனை செய்த தற்காக இருபது ஆண்டுகள் தீவாந்தரத் தண்டனையும், சிவா விற்குத் துணை புரிந்ததற்காக இருபது ஆண்டுகள் தீவாந் தரத் தண்டனையும் தயங்காது அளித்தார் அந்த வெள்ளை யர். இரண்டு தண்டனைகளையும் ஒன்றன்பின் ஒன்ருக ஏற்றுக் கழித்தல்வேண்டும். அரசநிந்தனை புரிந்ததாகச் சுப்பிரமணிய சிவாவிற்குப் பத்தாண்டுகள் தீவாந்தரத் தண்டனை விதித்தனர்.

மன்றநடுவர் அளித்த முடிவின் சிந்தனைப் பகுதிகள் :

"சிதம்பரனுர் தொழில் வளர்ச்சிக்குப் பாடுபடு வதாக நடித்து, ஆங்கிலேயருக்கும் இந்தியர்க்கும்

இடையே நிறப் பகைமையை வளர்த்தாரென் பதை மறுக்க முடியாது. இவர் பெரிய அரசியற் பகைவர். அவருடைய என்பும் அரசரிடம் அன்பு காட்டாது. சிவா இவருடைய கைத்தடி. திருநெல் வேலிக் குழப்பத்திற்கு ஆதரவாளர்கள் இவர் களே.

சிதம்பரனார் கைத்தொழில் வளர்ச்சிக்குப் பாடு படுவதாகக் கூறிக்கொண்டு, உரிமை பெறும் நெறிகளையே மக்களுக்கு உரைத்துள்ளார். 'கோரல்மில்' (ஹார்வி மில்) வேலை நிறுத்தம் இவராலேயே உண்டாயிற்று.

இந்தியர்களுக்கு அரசியல் சார்பாகப் பேசச் சட்ட முறைப்படி வாய்ப்பேயில்லை. ஏனெனில், இந்தியருக்கு வாக்குரிமையில்லை. அரசியற் சட்டத்தை மாற்றவும் திருத்தவும் நேரடியான நடவடிக்கைகளில் இறங்கச் சட்டம் இடங் கொடுக்கவில்லை; வேண்டுகோள் மட்டும் விடுக்க லாம். எனினும், அரசியலார் புறக்கணிக்கக்கூடா தென்பதில்லை.

இங்கிலாந்தில் மக்களுக்கு வாக்குரிமை உண்டு. அங்கு அரசியல் பேச்சுப் பேசுகிறவன் தன் வாக் காளரைத் தன் சார்பாகத் தேர்தலில் வாக்களிக்கு மாறு தூண்ட உரிமையுண்டு. இந்தியாவில் அத்தகைய நிலை கிடையாது. ஆகையால், இங்கு நாட்டு மக்களின் உடல்வலிமையைப் பயன் படுத்தி அரசாங்கத்தை எதிர்க்கவே மக்களிடம் ஒருவன் பேசுகிறான். இது பெரிய இடையூறான செயலாகும்.

வெளிநாட்டுப் பொருள்களை விலக்கும்படி ஒருவன் பேசலாம். ஆனால் விலக்குவதோடு நில்லாமல், அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக்கூடா தெனவும் கூறப்படுகிறது. இது அரசாங்கத்திற்கு இடையூறான அளவிற்குப் போகும்.

இவைகளே தீர்ப்பின் கருத்துக்கள்.

சிதம்பரனார்க்கு அப்போது வயது முப்பத்தைந்து. இளம்பருவ மனைவியாரையும் பச்சிளங் குழவிகள் இருவரையும் பிரிந்து, களவு கொலை முதலியன புரிந்த தீயருடன் தீவாந்தரமான அந்தமான் தீவில் வசிக்கும் படி தண்டனை கொடுத்த அரசாங்கத்தின் அருளை என்னென்பது! சிதம்பரனார் அரசியல் அறிவு மிக்க வழக்கறிஞர்; அரசியல் தலைவர்; கப்பலோட்டிய வீரர்; எளியோர்க் கிரங்கும் இன்னருள் வள்ளல்; செந்தமிழ்ப் புலவர்; சிறந்த கவிஞர்; அத்தகையார் நாட்டுப்பற்றுக் காரணமாக இத்தகைய கொடுந்தண்டனை பெற்றதை முன்னிட்டு எல்லோரும் வருந்தினர். சிதம்பரனாரின் தம்பியார் மனமுடைந்து பித்தரானாராம்! உள்நாட்டினும் வெளிநாட்டினும் உலவும் செய்தித்தாள்கள் பலவும் தீர்ப்பைக் கண்டித்தெழுதின.

அப்போது கவிஞர் பாரதியார் இந்தியா என்ற வார இதழின் ஆசிரியராக இருந்தார். அந்த இதழ் பின்ஹேயின் தீர்ப்பைப் பெரிதுங் கண்டித்தெழுதி, மக்கள் ஆங்கில ஆட்சி எதிர்ப்பில் ஈடுபட வேண்டுமெனவும் தூண்டி யெழுதியது. அதன் பொருட்டு, அதன் தலைவரான, திரு. சீனிவாச ஐயங்கார் தண்டிக்கப்பட்டார். 'இந்தியா' இதழின் அலுவலகமும் புதுச்சேரிக்கு மாற்றப்பட்டது.

இந்தக் கொடிய தண்டனையைக் கேட்ட இந்தியா மந்திரி லார்டு மார்லி என்பவர் அரச ஆட்பேராக இருந்த லார்டு மிண்டோவுக்கு,

"இத்தீர்ப்பை நான் ஒப்புக்கொள்ளவியலாது. இந்தப் பிழையையும் அறிவிலாச் செயலையும் நீங்கள் உடனே பார்வையிட வேண்டும். கொடுமை அளவுக்கு மீறினால் ஒழுங்கு நிலைக் காது. வெடிகுண்டுக்கு அது வழிகாட்டும்," என எழுதினாராம்.

சிதம்பரனார்க்குத் தண்டனை கொடுத்த பின்னரே வேறு மாநிலத்திற்கு மாற்றப்பட்டார்.

சிதம்பரனார் தண்டனை பெற்ற அதே வாரத்தில், அவர்க்கு அரசியற் குருவான திலகர் தம் கேசரி எனும் இதழில், அரசாங்கத்திற்கு ஒவ்வாத கட்டுரை யெழுதியதற்காக ஆறு ஆண்டுகள் தீவாந்தரமும், பத்தா யிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பெற்றார்.

தீர்ப்புப்பெற்ற சிதம்பரனாரும், சிவாவும் சிறைக் குச் சென்றனர். செல்லும் வழியில் சிதம்பரனார் அருமைத் தந்தையாரும் பெரிய மைத்துனரும் நிற் பதைக் கண்டனர். சிதம்பரனார், "கவலை வேண்டாம்," என்றனர். தந்தையாரும் "கடவுள் இருக்கிறார்; கவலைப்படாதே," என்றனர். சிதம்பரனாரின் ஐந்து வயது மகன் பெரிய மைத்துனரிடம் இருந்தான். அவனைக் கண்ட சிதம்பரனார் கண் கலங்கினர். இவ ருடைய காதல் மனைவியார் வீட்டினுள் மயங்கிக்கிடப் பதாக அறிந்தார். சிவாவுடன் சிறையை அடைந்தார். தம் மனைவி மக்களும் அருமைத் தந்தையும் உறவின

ரும் வாட, நாட்டுப்பணியில் இறங்கிய வள்ளலை என்னென்று புகழ்வது !

'விசாரணைக் கைதி' நிலையிலிருந்து 'சிறைக் கைதி' நிலைக்கு உயர்வுற்ற சிதம்பரனார் மனக்கலக்கமின்றிச் சிறைச்சாலையை அடைந்தார். அங்கே இருவருடைய உடைகளையும் மாற்றிவிட்டுச் சிறையுடை அளித்தனர். தலையிலே சிறைக்குல்லா அணிவித்தனர். மரத்தின் பட்டைபோன்ற உரத்த துணியில் காலும் கையுமில்லாத காற்சட்டையும், கைச்சட்டையும், அத்தகைய முரட்டுத் துணியாலான சிவப்புக் குல்லாவும் அணிந்த இருவரும் உருவம் மாறிக் காணப்பெற்றனர். சிதம்பரனார் அவற்றைப்பற்றி, **"மூன்றையும் அணிந்திடின் முண்ட மேயாகத்—தோன்றுவ தல்லது சொரூபம் தோன்றாத்—திறந்தவை.''** என்றும், **"எம் பெயர் உயரவும் எம் உருத் தாழவும் —உடுத்தேம்,''** என்றும் உரைத்துள்ளார். இவை மட்டுமோ சிறையடையாளம் ! வலக்காலிலே இரும்பு வளையங்களும் அணிந்தனர். நாட்டுப்பணி வீரர் அணியும் வீரக் கழலென விளங்கின அவைகள்.

இவ்வுடை அணிந்தவுடன் சிவா மயங்கித் திண்ணையிற் படுத்துவிட்டார். சிதம்பரனாரோ புதுக்கவி புனைந்தவாறே உலாவினார். சிறிது பொறுத்துச் சிவா, "உள்ளம் மயங்கிப் படுத்தேன். இதுவரை என் நினைவேயில்லை,'' என்றார். சிதம்பரனார் வருந்தினார். "நீ மலை கலங்கினும் மனங்கலங்காத மாண்புறு வீரன்! நீயே கலங்கினால் நான் எங்ஙனம் ஆற்றுவேன் ! நீ களைத்துப் படுத்தா யென்று எண்ணி வாளா இருந்தேனே !'' என்றார்.

அப்போதே சிறையுணவு தொடங்கியது. மண் சட்டியில் மண்ணொடு காய்ச்சிய கேழ்வரகுக் கூழைக் கொண்டுவந்தனன் ஒருவன். இருவரும் அதனைக் கொட்டிவிட்டனர். அறிந்தவர் சிலர் பாலும் பழமும் ஒருவேளைக்கும், சிற்றுண்டி ஒருவேளைக்கும் அனுப்பினர். அவற்றை உண்டனர்.

### கோயமுத்தூர் சிறை

அன்றே, சிதம்பரனாரை மட்டும் கோயமுத்தூர் சிறைக்குக் கொண்டுசென்றனர். நண்பர்களின் பிரிவுத் துயரம் பேசத்தக்கதோ! உள்ளம் பிரியாமல் உடல் மட்டும் பிரிந்தனர். பாளையங்கோட்டைப் புகைவண்டி நிலையத்தை நெருங்கும்வரை உறவினரும் நண்பரும் கூடி வந்து கண்ணீருங் கம்பலையுமாக நின்று வழியனுப்பிய காட்சியைக் கண்டாற் கல்லுங் கரையும்! புல்லும் புலம்பும்! இவருடைய நண்பர்கள் வெங்கு முதலியோர் 'விரைவில் மீட்போம்' என ஆறுதல் கூறினர்.

வழியிற்கண்ட நண்பருக்கும் பிறருக்கும் சிதம்பரனார் ஆறுதல் கூறி, "விரைவினில் திரும்புவேன்! விடாதீர் சுதேசியம்—தரைமிசை எதுவும் தருவது அதுவே," எனப் பிரிவுமொழி மொழிந்தார்.

புகைவண்டியில் ஏறினார். ஒரு வெள்ளைக் காவல் துறைக் கண்காணிப்பாளரும் மூன்று காவலர்களும் காவலாக இருந்தனர். புகைவண்டி புறப்பட்டது. கண்ணீராகிய அன்புநீராட்டி வழியனுப்பிய கணக்கற்ற மக்கட் கடலைக் கண்ட சிதம்பரனார் சிந்தை நைந்தார். கங்கை கொண்டான், மணியாச்சி, மதுரை

ஆகிய புகைவண்டி நிலையமெங்கும் நண்பர்களும் பொதுமக்களும் வந்து நின்று மனங்கலங்கி வழிவிட்டனர். பிறகு, திரிசிரபுரம் காவல் நிலையத்தில் தங்கினார். அங்கே மாணவர்கள் வந்து வணங்கி உரையாடினர். அங்கிருந்து ஈரோடு, போத்தனூர் வழியே கோயமுத்தூர் சிறையை அடைந்தார்.

**சிறையில் வேலை**

சிறையை அடைந்தவுடன் பாளையங்கோட்டைச் சிறை உடைகளை மாற்றிவிட்டுப் புதிய இருவகை உடைகளையும் கயிற்றுப்பாய் ஒன்றையும் கம்பளி இரண்டையும் சிறைத் துணை மேற்பார்வையாளர் (டிப்டி சூப்பிரண்டெண்டு) அளித்தார். பிறகு, இவரை அழைத்துச் சென்று நான்காம் தொகுதிச் சிறையின் காப்பாளரிடம் ஒப்புவித்துச் சென்றார். சென்றவுடனேயே சணல் கிழியந்திரம் சுற்றும் வேலை கிடைத்தது. சுற்றிச் சுற்றிக் கைத்தோல் நைந்து குருதியும் கசிந்தது! தமிழன்னையின் கண்ணீரும் வழிந்தது!

நண்பகலிற் சட்டியும் குடுவையும் வந்தன. உணவளிப்போன் வந்தான். மேலே கேழ்வரகு அடையும் அடியிற் கோதுமை அடையும் வைத்துக் குழம்பும் கொடுத்தான். 'கேழ்வரகு அடையை யெறிந்துவிடுக,' என்று மெல்லிய குரலில் அன்போடு கூறிப்போனான். உண்டபிறகு, முன்போலவே பொறி (இயந்திரம்) சுற்றும் புல்லிய தொழில் புரிந்தார்.

**இரவு இரண்டாம் யாமம்**

அன்றைய இரவு இரண்டாம் யாமத்திற் சிந்தனையுடன் சிதம்பரனார் அமர்ந்திருந்தார். அப்போது

அவருடைய நண்பர் சிலர் பூனைபோல் வந்தனர். அவர்களைக் கண்டு வியந்தார் சிதம்பரனார். அவர்கள் இவரை வணங்கித், "தங்கள் ஆட்களாகிய நாங்கள் சிலர் இங்குளோம். இந்தத் தொகுதிக்கு நாங்கள் வரலாகாதெனச் சிறைக் காவலன் 'மிஞ்சேல்' செப்பினன். ஆகையால், இப்போது வந்தோம். இனி ஒவ்வோர் இரவினும் வந்து காண்போம். காலையில் ரவை உப்புமாவும், நண்பகலினும் மாலையிலும் ரவைத் தோசையும் பிறர் அறியாமல் அனுப்புகிறோம். ஏற்றுக்கொள்க," என்று வேண்டினர். பிறகு, மனத்தைச் சிதம்பரனாரிடம் விட்டுச்சென்றனர். அவர்களிற் பலர் சிவகாசிக் கலக வழக்கிலே தண்டனை பெற்றவர்கள். சிதம்பரனாருக்குத் தெரிந்தவர்கள். அவர்கள் அங்கிருப்பது தெரிந்தபிறகு, அவர் தாம் தனிமையில்—சிறையில்—இல்லையென எண்ணி மகிழ்ந்தார். நல்லோர்க்கு நலமே கிடைக்குமன்றோ? இவ்வாறு உணவு வகையிலும் உசாவும் (பேசும்) வகையிலும் உற்றகவலை நீங்கினார்.

**செக்கிழுத்தல்**

ஒரு திங்கட்கிழமையன்று சிறைக் காவலன் சிதம்பரனாரின் கைத்தோல் உரிந்திருப்பதைக் கண்டான். உடனே, அவ் வேலையிலிருந்து நீக்கிச் செக்கிழுக்கும் வேலையில் அமர்த்தினான்! மாடிழுக்கும் செக்கை மக்கள் இழுக்கும் சிறப்புத்தான் என்னே! இக்கொடிய நிலையை எண்ணி ஏங்கிய பாரதியார்,

"மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ?"

என இறைவனிடம் முறையிட்டார்.

சிதம்பரனார் செக்குத் தள்ளச் சென்றார். அங்கே இருக்கும் மற்றைக் கைதிகள் இவரைத் தடுத்து, "நீங்கள் சிறைக் காவலனும் சிறை மேற்பார்வையாளரும் வரும்போது மட்டும் எங்களுடன் வந்து தள்ளுங்கள். மற்றைய நேரத்தில் அதோ அம் மர நிழலில் அமர்ந்து எள்ளும் வெல்லமும் தின்றுகொண்டிருங்கள்.'' என்று பணிவுடன் பகர்ந்தனர். அவர்களுடைய அன்புப் பணியிலே ஈடுபட்டு அவ்வாறே செய்தார்.

**ஏன் நகைத்தாய் ?**

ஒருநாள் சிறை மருத்துவரிடம் சென்று வருமாறு சிறைக் காவலன் செப்பினன். சென்றார் மருத்துவரிடம். சென்றபோது எதற்காகவோ நகைத்தார், மருத்துவர் 'ஏன் நகைக்கிறாய்?' என்றார். 'பின் அழவா சொல்கிறாய்?' என்றார் சிதம்பரனார். அதை அந்த மருத்துவர் சிறை மேற்பார்வையாளர்க்கு எழுதியனுப்பி விட்டார். அவரோ சிதம்பரனாரை நோக்கி, "நீ செய்தது தவறு. இரு முழுவாரம் மேலும் தண்டனை,'' என்றான். எப்படியிருக்கிறது!

**மீண்டும் விசாரணைக் கைதி**

சிதம்பரனார் வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்திற்கு, மேல் முறையீடு செய்யப்பெற்றிருந்தது. அங்கு முறை மன்றத்தின் முடிவு தவறெனத் தீர்ப்புக் கூறப்பட்டது. ஆகவே, சிதம்பரனார் மறுபடியும் விசாரணைக் கைதியானார். சொந்த உடையும் சொந்த உணவும் பெற்றார். உறவினரும் மனைவி மக்களும் வந்து கண்டு பேசும் உரிமையும் பெற்றனர். சிறைக் காவலர் வந்து, "உம் உடல் நிலைக்கு

வேலை செய்தல் நல்லது. ஆகையால் வேலை செய்ய விரும்புகிறீரா?" என்றான். இவர், "விரும்பிலேன்" என்றார். அவன் இவர் இருந்த அறையை இவரை உள்ளே விட்டுப் பூட்டிச் சென்றான். மருத்துவர் இதனை அறிந்து, "அறையைப் பூட்டலாகாது. மேலும் காலை யும் மாலையும் உடல் நலம்பெற உலாவவும் ஒருமணி நேரம் வெளிவிடல் வேண்டும்," என்றார். பிறகு, அவ்வாறே நடந்து வந்தது. சிறைக் காவலன் மனம் வாடினான்.

அந்த நாட்களில், '**மனம்போல வாழ்வு**' எனும் நூலை எழுதினார்.

***சிறைக் காவலன் குத்தப்பட்டான்***

ஒரு நாள் சிதம்பரனார் சிறைஅலுவலகத்திற்குச் சென்றிருந்தார். அங்கே, **இராமன்** எனும் ஒரு காப்பாளர் பணிபெற்ற குற்றவாளி (கான்விக்டு வார்டர்) இவரைக் கைகுவித்து வணங்கினான். இதனைச் சிறைக் காவலன் பார்த்துச் சினுங்கினான். அவன் இராமனை விளித்து, "நீ யாரை வணங்கினை?" என்றான். அவன், 'நான் யாரையும் வணங்கிலேன்," என்றான். உடனே, சிதம்பரனாரை நோக்கி, "இவனோ உன்னை வணங்கினவன்?" என்று சிறைக் காவலன் வினவினான். சிதம்பரனார், "எல்லோரும் என்னை எப்பொழுதும் வணங்குகின்றனர். நான் இவன் வணங் கினதைப் பார்க்கவில்லை," என்றார். அவன் இறுமாப் புடன் வினவியதற்குச் சிதம்பரனார் அளித்த விடை எவ்வாறு உள்ளது பாருங்கள்! பிறகு, சிதம்பரனார் தம் அறைக்குச் சென்றுவிட்டார்.

அவர் வந்த பிறகு, சிறைக் காவலன் அந்த இராமனைக் கூப்பிட்டு, "அவன் தவறுடையான் என்று தனியாக வைத்து இருக்கிறோம். அவனை நீ இவ்வாறு வணங்கினால், வேறு எவர்தாம் மதியா திருப்பர்? இனியும் நீ வணங்கினாற் 'சப்பாத்து அடியே!'' என்று வெருட்டி அனுப்பினான். இராமன் உள்ளம் கன்றியே ஏகினான்.

சென்ற இராமன் சிறைக் கைதிகளில் வலிமிகுந்த மூவரை மறைவாக அழைத்துச் சென்று, "நாளைக்கு உங்களைப் பார்க்க சிறைக் காவலனும் மேற்பார்வை யாளரும் மருத்துவரும் வரும்போது அவர்களைக் கொன்றிட வேண்டும்,'' என்று கூறினான். அம் மூவரும் சரியென ஒப்பினர். ஆனால், ஒருவர் சிதம் பரனாருக்குத் தெரிவியாமற் செய்வது தவறென்றார். அதனால் அன்று நின்றது. அடுத்த ஞாயிறன்று அம் மூவரும் வந்து சிதம்பரனாரிடஞ் செப்பினர் தம் கருத்தை.

சிதம்பரனார், "மேற்பார்வையாளரும் மருத்து வரும் என்ன தவறு செய்தனர்?" என்று வினவினர். அவர்கள், "இல்லை'' என்றனர். "அங்ஙனமேல் அவரைக் கொல்வதேன்? தீய சிறைக் காவலனை வேலையை விட்டு நீங்கச் செய்தால் போதுமே,'' என்றார் நம் சிதம் பரனார். "ஆம்'' எனக் கூறிப் போயினர் அவர்கள். ஆனால், அடுத்த ஞாயிறன்று பகல் இரண்டு மணிக்கு சிறைக் காவலரின் அறை போர்க்களமாயிற்று. அபாய மணியும் சீழ்க்கையும் அலறின. கைதிகள் பூட்டை உடைத்தனர். சேமப் படைக் காவலர் விரைந்து வந்து கலகத்தை அடக்கித் தீமைசெய்த கைதிகள்

பலரைப் பிடித்துச் சிறையுள் அடைத்தனர். ஓடியவர்களைச் சுட்டபோது ஒருவன் இறந்து வீழ்ந்தான்.

சிறைக் காவலன் பிணம்போற் கிடந்தான்! நல்ல காயம்! அவனை மருத்துவச் சாலைக்குத் தூக்கிச் சென்றனர். அன்றிரவு அந்த இராமன் கைதிகட்கெல்லாம் கற்கண்டு வழங்கினனும். சிறைக் காவலனைக் குத்திவிட்டு மூவரும் தப்பிச்சென்றதற்காகப் பலரும் குற்றஞ் சாட்டப்பெற்றனர். வழக்கு நடைபெறும்போது எதிரிகள் சார்பாகச் சிதம்பரனாரின் ஏற்பாட்டின்வண்ணம் சீ. கே. சுப்பிரமணியம் என்ற புகழ்பெற்ற—கோயமுத்தூரில் வாழ்பவரான—வழக்கறிஞர் வழக்கை ஏற்று நடத்தினர். சிறையிலிருந்து தப்பியோடிய பலர்க்கும் ஒன்று முதல் இரண்டாண்டுகள் கடுங்காவலெனப் பலவகையாகக் குற்றநடுவர் தீர்ப்பு வழங்கினர். அப்பீலில் ஒன்றிரண்டு திங்களாக உறுதியாயிற்று. சிறைக் காவலரைத் தாக்கிய மூவரும் முறைவர்க் குழு மன்றத்துக்கு மாற்றப்பெற்றனர்.

## சிதம்பரனார் மேல் முறையீடு—செக்குத் தள்ளுதல்

சென்னை உயர்நீதி மன்றத்தில் (இருபதும் இருபதும் என ஆண்டுக் கணக்கிடப்பட்ட தண்டனை) ஆறும் நான்குமாக மாறின. ஆனல், அந்தமானுக்கே செல்லவேண்டுமென விதித்தனர். சிதம்பரனாரின் நண்பரால் வழக்கு தலைமை நீதிமன்றம் சென்றது. மீண்டும் செக்குத்தள்ளும் வேலை சிதம்பரனார்க்குக் கிடைத்தது.

சிறைக் காவலனைக் குத்திய மூவரின் வழக்கு முறைவர்க் குழு மன்றத்தில் நடந்தபோது, சிதம்

பரனார் ஏற்பாட்டின் வண்ணம் அவர் நண்பரே எதிரி கட்காக வழக்கை நடத்தினார். சிதம்பரனாரும் எதிரி கட்காகச் சான்று கூறினார்.

அவர் கூறியது :

"கண்காணியார் படம் பிடிக்கும் பான்மை உடையவர். சிறைக் காவலரே சிறையை ஆள்கிறார். அவர் செயலெலாம் கொடியன. பழுத்த இலையும் புழுத்த காயும் வெந்நீரிற் சேர்ந்து குழம் பாகின்றன. கைதிகளின் முட்டிகளிற் கொம்பால் அடிக்கிறார். அதனாலே கலகம் ஆயிற்று"

அப்பொழுது அரசாங்க வழக்கறிஞர், "உமக்குச் சிறை எப்படியிருக்கிறது?" என்றார். சிதம்பரனார், "நீர் சிறையில் சில நாட்கள் இருந்தால் அறியலாம்," என்றார். யாவரும் நகைத்தனர். சிறைக்குச் சிதம்பரனார் திரும்பிச் சென்றபோது, கண்காணியார் "சான்று கூறினை! ஏற்றுக்கொள் வருவதை," என்றான். "காணவே வந்தேன்," என்று புன்முறுவலுடன் புகன்றார்.

**நூல் முறுக்கல்**

அடுத்த திங்களிலிருந்து இவருக்குத் தனியறையும் இராட்டினத்தில் நூல் முறுக்கும் வேலையும் கிடைத் தன. இவைகளே கண்காணியார் செய்த மாற்றம். செக்குத் தள்ளச் சென்றால், அங்குள்ள கைதிகட்குச் சொல்லிக்கொடுத்துக் கலகம் மூட்டிவிடுவார் என்றே இவ்வாறு செய்தனனும். அந்தத் தனியறையில் 'அமிர்த பஸார்' 'சுதேசமித்திரன்' 'இந்து' ஆகிய செய்தித்தாள் கள் மறைமுகமாகக் கிடைத்தன இவருக்கு. அவற்றைப்

படித்த நேரம் போக ஆங்கில நூல்களும் தமிழ்நூல் களுங்கூடப் படிக்கக் கிடைத்தன.

தோட்டி வேலை செய் !

அச்சிறையில் அரசியற் கைதிகளை நடத்தும் முறை மிகவும் கொடியதாக இருந்தது. கல்வியறிவிற் சிறந்த— அரசாங்கத்தை எதிர்ப்பதாலே குற்றவாளிகளான— அறிஞர்களையும், திருட்டும் கொலையும் புரியும் குற்ற வாளிகளையும் ஒரே வகையாக நடத்துவது பொருந் துமா? அக்காலத்தில் அவ்வாறே நடந்தது. நம் சிதம்பர னாரையே அவர் தம் அறையில் கழித்து வைக்கும் சிறு நீர்ச் சட்டியை எடுக்கவேண்டுமென்றனர்! இவர் மறுத் தார். 'என்ன செய்யினும் செய்யேன்,' என்றார்.

துப்பறிதல்

இவருக்குச் செய்தித்தாள்கள் வருவதை உணர்ந்த கண்காணியார் காப்பாளர்களுக்குக் குறிப்பிட்டான். கண்டுபிடிக்க உறுதிபூண்ட காப்பாளர்கள் ஓர் 'இந்து' வையும் இவர் மனைவியார் கடிதத்தையும் பற்றினர். கண்காணியாரிடம் விசாரணை நடந்தது.

"இஃது உம் மனைவியின் கடிதம். இக் கடிதத்தில் உம் கடிதம் வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கறிவியாமல் ஏன் கடிதம் எழுதினீர்?"

"நன்று! எவனாவது ஒருவன் என் கடிதம் வந்த தாக என் மனைவி யெழுதியதைப்போல் எழுதிவிட லாம்! அதற்கு நான் குற்றவாளியாவேனோ?"

"உம்மைத் தூக்கிவிட இஃது ஒன்றே போதும்."

"என் நல்வினையால் நீர் அத்தகைய அலுவலில் இல்லையே!"

கண்காணியார் சீற்றத்துடன் சென்றுவிட்டான். சிதம்பரனார் நகைத்தார். ஒழுங்கல்லாத சிறை விதிகளை மறைமுகமாகவேனும் மீறுதல் பிழையன்றென்று இவர் நினைத்திருக்க வேண்டும்.

### அச்சுத்தொழில்

ஒரு நாள் கண்காணியாரும், சிறைக் காவலரும் வந்தனர். "தொழில் கற்றுக்கொள்ள ஒருவாரம் காலம் அளிப்பதும், பிறகு கைதிகள் தொழில் செய்வதும் சிறை வழக்கம். நீர் ஒரு திங்களாகியும் கணக்குப்படி நூல் முறுக்கித் தரவில்லை? ஏன்?" என்று வினவினர்.

சிதம்பரனார், "நான் தீவாந்தர தண்டனை பெற்றவன். கடுங்காவல் பெற்றவனல்லேன். ஆகவே, கடுந்தொழில் புரியேன்," என்றார். கண்காணியார் இதனைச் சிறைத் தலைமைக் கண்காணியாரிடம் அறிவித்தான். அவன் வந்தபோது கண்காணியார் சிதம்பரனாரைச் சுட்டிக் காட்டி, சிறைக் காவலனைக் குத்தியதற்கும் சிறையை உடைத்ததற்கும் காரணர் இவரே," என்றான்.

தலைமைக் கண்காணியார் சிதம்பரனாரையும் வினவி அறிந்து, "நாம் அரசியற் கைதிகளை மதிப்புடன் நடத்தல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் நம்முடன் நன்றாக நடந்து கொள்வர்," என்று கூறியேகினான்.

அன்றுமுதல் அச்சுக் கோக்கும் வேலையில் அமர்ந்தார். சிறைச்சாலைக்கு வேண்டும் விண்ணப்பத் தாள்கள் முதலியன அச்சுக் கோக்கப் பெற்றன. கண்காணியாரான காட்லன் அன்றுமுதல் இவரிடம்

அன்பாக நடந்து வந்தான். அவன் சென்னைக்கு மாற்ற லானான். அவனுக்கப்புறம் முன் மருத்துவராக இருந்தவன் கண்காணியாராக மாறினான்.

**வழிக்கு வந்தனர்**

ஒரு முறை சிறைக் காவலரைக் குத்த முயன்ற மூவரில் இருவரை சிறைக் காவலன் கைதிகளைக் கொண்டு அடிப்பித்தான். அது கண்ட சிதம்பரனார் தம் தந்தைக்கு மறைவாகச் சொல்லியனுப்பி வரவழைத் தார். அவரிடம் சிறைக் காவலன் செயலைச் செப்பினார். பிறகு, 'சிறையின் கைதிகளைக் கொண்டு என்னை அடிக்க முயல்கிறான். அதற்குத் தண்டல் நாயகரிடம் முறையீடு செய்யுங்கள்,' என்றார். அது சிறைக்காவலன் மூலமாக (முன்னாள் மருத்துவர்) கண்காணியார்க்கு எட்டியது. அவன் இவரை வர வழைத்து, 'நீர் அஞ்சவேண்டாம்; நான் உம்மை ஆதர வுடன் பார்த்துக் கொள்கிறேன்; நல்லுணவும் நல்கு கிறேன்; முறையீடு செய்யாதீர்,' என்று தணிவுடன் சாற்றினான். சிதம்பரனாரின் தந்தையும் இவருக்கு ஆறுதல் கூறிவிட்டுச் சென்றார். அன்றுமுதல் அவனே இவருக்கு வேண்டியவற்றை வேண்டியவாறளித்துப் பேணி வந்தான்!

**புலிக்குப் பூனையா அறிவூட்டுவது?**

சில நாட்களுக்குப்பின், சென்னை சென்ற கண் காணியார் திரும்பி வந்தான். அவன் இவரை அழைத்து, 'நீர் சிறை அலுவலர் (கரன்விக்டு ஆபீசர்) வேலை பார்க்கிறீரா? ஆண்டுக்கு மூன்று திங்கள் தண்டனை குறையும். உறவினரைக் காணலாம்; கடிதம்

எழுதலாம்; கடிதம் பெறலாம்; திங்களில் ஒருநாள் விடுமுறை கிடைக்கும்!' என்று நயம்பட வுரைத்தான். சிதம்பரனார் நகைத்தார். "நான் சிறையை ஆள வரவில்லை. ஆனால், ஆள்கைக்கு இடையூறு செய்திடவே வந்தேன். ஆகையால், நான் சிறை அலுவலர் (கான்விக்டு ஆபீஸர்) வேலை பார்க்கமாட்டேன்," என்றார். 'நன்று' என்றான் அவன்.

நல்ல பண்புடைய கைதிகளையே சிறைகாப்பாளர்களாகவும் அலுவலர்களாகவும் அமைத்துவிடுவது ஒரு வழக்கம். வழக்கறிஞரான சிதம்பரனாரை அவ்வாறு செய்யவே கண்காணியார் விரும்பினான். சிதம்பரனாரோ ஒப்புக்கொள்பவர்?

சில நாட்கள் கழிந்தன. காட்ஸன் வேறொருவனை அனுப்பினான் சிதம்பரனாரிடம். அவன் வந்து அவ்வேலையை ஏற்றுக்கொள்ளும்படி அறிவுரை கூறினான். சிதம்பரனார் சினங்கொண்டார். உடனே அவர், 'அடே அறிவிலி! வாயை மூடு. நீயோ எனக்கு அறிவுரை அறைபவன்! உனக்கும் உன் அப்பனுக்கும் உன் கண்காணியதிகாரிக்கும் உன்னை ஆளும் ஆளுநருக்கும் மன்னருக்கும் அறிவுரை வழங்கும் பெற்றிமையுடையேன். செல்,' எனச் சீறினார். அஞ்சாத சிங்கம் அல்லரோ அவர்!

மறுநாள், கண்காணியார் சிதம்பரனாரை நோக்கி, 'நீர் சிறைக்காவலரை அவமதித்துச் சிறுமொழி செப்பினீர். ஆகையால், இரண்டு *நெடுவாரங்கள் சிறைத்தண்டனையாகச் சேர்க்கப்பட்டன,' என்றான்.

---

* நெடுவாரம் பதினைந்து நாள். சிறுவாரம் ஏழு நாள். இவ்வாறு சிதம்பரனார் சுய சரிதையில் உள்ளது.

### கண்ணனூர்ச் சிறை

மேலே கூறிய நிகழ்ச்சி நடந்த ஒரு வாரத்திற்குப் பின் சிதம்பரனார் கண்ணனூர்ச் சிறைக்கு மாற்றப் பெற்றார். அங்கு இவருக்குத் தனியே ஓர் அறை கொடுக்கப்பெற்றது. அது 'கோரன்டைன் பிளாக்' ஓரம் இருந்தது. அந்தப் பகுதி மிகவும் அழகிய காட்சியை உடையது. நடுவில் தோட்டமும், நான்கு பக்கத்தினும் திசைக்குப் பன்னிரண்டு அறைகளும், அறைகளுக்குத் தாழ்வாரமும், அறைகளின் பின்புறம் நான்கு பக்கமும் வெளியிடமும், வேலியும், ஒரு மூலையிற் கிணறும், மற்றொரு மூலையில் வழியும், வேப்பமர நிழலும் ஆகக், காணவும் வசிக்கவும் கருத்தை யிழுக்கும் பான்மையது அது. நடுவிலுள்ள தோட்டத்திலே ஆங்கிலவகைச் செடிகளும், முல்லையும், பிச்சியும், மல்லிகையும் ரோஜாவும் நறுமணம் கமழும் காற்றுமாகச் சிதம்பரனாரின் சிந்தையைக் களிப்பித்தன.

அங்கே, திருநெல்வேலிக் கழக வழக்கிற் சேர்ந்த சிலரும் சிறைப்பட்டிருந்தனர். இவருக்கு அங்குக் கயிறு கலை ஒழுங்கு Size) செய்யும் வேலை கிடைத்தது. மேலும் கணபதி பிள்ளை என்பவரால் இவருக்கு வேண்டிய நலன்களெல்லாம் கிடைத்தன. பல நல்ல காப்பாளர்களும் சிறையதிகாரிகளும் பழக்கமாயினர். நல்ல பொருள்களும் மேம்பாடும் கிடைத்தன.

### 'ஆஷ்' கொலை

ஒருநாள் இரவு பன்னிரண்டு மணிக்குச் சிதம்பரனார் உறங்கும்போது, 'நண்பர் சிதம்பரம்!' என்று பன்முறை கூப்பிட்ட ஒலி கேட்டது. விழித்து நோக்

கினர். அறையின் எதிரிலே நின்று துணை மருத்துவ அதிகாரி நலம் வினவினர். பிறகு, மெதுவாகக், "கலெக்டர் ஆஷ்ஷைத் தெரியுமோ?" என்றார். 'தெரியும்' என்று செப்பினர் சிதம்பரனார். மேலும், "நான் இங்கு வந்ததற்கும் தூத்துக்குடி சுதேசிய நாவாய்ச் சங்கம் முறிவுற்றதற்கும் (இவர் சிறைக்கு வந்தபின் அது முறிந்தது) அவரே காரணர்," என்றார்.

வந்தவர், "நேற்று மணியாச்சியில் யாரோ ஒருவன் ஆஷ்ஷைச் சுட்டுக்கொன்று தன்னையுஞ் சுட்டுக் கொண்டனனும்," என்றார். மற்றும், "அவ்வாறு அவனைச் சுட்டதன் எதிரொலியாக நீங்களும் இனி நடைபெறும் ஐந்தாம் ஜார்ஜு அரசரின் முடி சூட்டு விழாவின்போது விடுதலைபெற இயலாது," என்று கூறிச் சென்றார்.

சிதம்பரனாரைத் தண்டிக்கும்போது குற்ற நடுவராக இருந்த ஆஷ் தண்டல் நாயகராக உயர்த்தப் பட்டான். அவன்மேல் கண்வைத்திருந்த புரட்சி இளைஞர்களில் ஒருவர் 17-6-1911இல் ஆஷ் கொடைக் கானலுக்குப் புகைவண்டியிற் சென்று கொண்டிருக் கும்போது மணியாச்சியில் சுட்டுக்கொன்றார். அந்த இளைஞர் செங்கோட்டை காட்டுத்துறை மேற்பார்வை யாளரான (காட்டிலாக்கா அதிகாரி) இரகுபதி ஐயரின் மகன் வாஞ்சிநாதன் எனப்படுவார். அவர் தண்டல் நாயகரைச் சுட்டவுடன் தாமும் புகைவண்டியிலுள்ள மலங்கழிக்கும் அறையிற் புகுந்து வாய்வழியாகச் சுட்டுக்கொண்டாராம். அவ்வாறு செய்ததால் தலை சுக்கல் சுக்கலாகப் போய்விட்டது. தம் புரட்சிக் கழகத் தோழர்களை அரசாங்கத்தார் பிடிக்காதிருப்பதற்கே

தம்மை அடையாளந் தெரியாமல் இருக்க அவ்வாறு சுட்டுக்கொண்டாராம். எனினும், வழிப்போக்கர் ஒருவர் அடையாளம் கூறிவிட்டார்.

இவ்வாறு ஆஷ் கொலையுண்டது சிதம்பரனார்க்கு ஓரளவில் மகிழ்ச்சியே. எனினும், இரத்தம் சிந்தும் புரட்சியை அவர் விரும்பவில்லை. ஆகையால், தம் நண்பர்களுக்கு இத்தகைய புரட்சி வேண்டாம் என்று எழுதியிருக்கிறார்.

அங்கிருக்கும்போது சிறைத்தலைவன் (டவர் ஆபீஸர்) இவரிடம் பணம் பறிக்கும் நோக்கத்துடன் சில நன்மைகள் செய்துவந்தான். இவருக்கு வேண்டியவை நல்குவதும் அடிக்கடி நலன் கேட்பதும் அவன் வேலை. அவன் கருத்தையுணர்ந்த இவர் தம்முள் நகைத்தவராய்ச் சிலபோது பொருள் நல்கிவந்தார். பிறகு, மேலதிகாரிகளுக்கு அறிவித்து அவனுக்கு அறிவு புகட்டினார்.

அங்குச் சில கைதிகள் தண்டனைக் காலம் முடிந்தும் சிறையதிகாரிகளின் கொடுமையால் விடுதலை பெறாதிருந்தனர். அறிந்த சிதம்பரனார் உடனே, 'இந்து'வில் இக்கொடுமையை வெளியிட்டார். அதனால், அவர்கள் விடுதலை பெற்றனர்.

நூல்கள் இயற்றுதல்

இவர் சிறை வேலையாக அச்சுக்கோத்தலை மறுமுறையும் பெற்றார். அவ் வேலையைச் சிறிது செய்த பிறகு நூல்கள் இயற்றும் பணியில் ஈடுபட்டார். கண்ணனூர்ச் சிறையில் இருக்கும்போதுதான், 'மெய்யறிவு' 'மெய்யறம்' என்னும் நூல்கள் இயற்றப்

பெற்றன. அங்கும் சிறைக்காவலர் இவருக்குத் தீமை செய்யவே முனைந்தான். ஆனால், கண்காணிப்பாளர் மட்டும் இவருக்கு வேண்டுவன செய்துவந்தான். அவனுடைய கட்டளையின்படியே இவருக்கு நூல் முதலியன இயற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

கடவுளை வணங்கலாமா?—உண்ணாவிரதம்

ஆனால், இந்த நல்வாய்ப்பைச் சில நாட்களில் இழந்தார். இவருக்கு வேண்டுவன செய்த கண்காணியார் மாற்றப்பட்டு வேறொருவன் வந்தான். மருத்துவராக இருந்த வேறொரு வெள்ளையன் கண்காணியாராயினன்.

ஒருநாட் காலை ஒன்பது மணிக்குச் சிதம்பரனார் இறைவனைப் பாடியவாறு உலாவிக்கொண்டிருந்தார். அப்போது இவருடைய அறைக்கு வெளியே கண்காணியாரும் சிறைக்காவலரும் சிறைக் காப்பாளர்களும் நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்கள் நிற்பதை அறியாமலே இவர் தம்மை மறந்து கடவுளன்பில் ஈடுபட்டிருந்தார். சிறிது பொறுத்தபிறகு, கண்காணியார் 'என்ன செய்கிறீர்?' என்றான்.

அப்போதுதான் அவர்களின் வரவை உணர்ந்த சிதம்பரனார், 'என் கடவுளை இறைஞ்சினேன்,' என்றார். 'வேலை செய்யும்போது கடவுள் வணக்கமா?' என்று சீறிப் போயினன். பிறகு, அரிசி உணவு நிறுத்தப்பட்டுக் கேழ்வரகுணவு கிடைத்தது. சிதம்பரனார் 'இவனிடம் எங்ஙனமேனும் அரிசியுணவு பெறுதல் வேண்டும்,' என வுளங்கொண்டார். ஒரு வாரம் வரையில் அன்றாடம் விளக்கெண்ணெய் உட்கொள்ளத் தொடங்கினர். வந்த கேழ்வரகுண

வைத் திருப்பிவிட்டார். ஒருவாரத்திற் பத்துப் பவுண்டு எடை குறைந்துவிட்டது.

கண்காணியார் அஞ்சி, அரிசியுணவும் பாலும் அளிக்க வகை செய்தான்.

**விடுதலை !**

இவ்வாறு இவர் உண்ணுவிரதம் மேற்கொண்டிருந்தபோதுதான் தலைமை நீதிமன்றத் (பிரிவி கவுன்சில்) தீர்ப்பு வந்தது. சென்னை உயர்நீதி மன்றத்தில் விதித்த பத்தாண்டு தீவாந்தரத் தண்டனை **ஆறுண்டுக் கடுங்காவல் தண்டனையாகக்** குறைக்கப்பட்டது.

1857இல் விக்டோரியா அரசியார் வெளியிட்ட அறிக்கையை ஏழாம் எட்வர்டு பாராளும் மன்றிற் படித்ததற்கும், எட்வர்டு இறந்ததற்கும், ஐந்தாம் ஜார்ஜ் அரசர் முடிசூட்டிக் கொண்டதற்கும் ஆக ஒன்றரை ஆண்டு சிறையிருப்புக் கழிக்கப்பெற்றது. மிகையாயிருந்த நாலரையாண்டுகள் கழிய இன்னும் சில நாட்களே இருந்தன. இந்த விளக்கத்தை இவர் தம் வீட்டார்க்கு எழுதியிருந்தார். அவர்களும் வந்திருந்தனர்.

1912ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் ஒரு நன் மாலையில் சிறைக் காவலன் கூப்பிட்டான். சிறையுடையுடன் சென்ருர். அவன், 'விடுதலைக் கட்டளை கிடைத்தது. நீர் வீடு செல்லலாம்,' என்ருன். இவருடைய மைத்துனன் அனுப்பியிருந்த வீட்டுடையை அணிந்து, சிறையுடையையும் சிறைத்துன்பத்தையும் நீக்கிக்கொண்டு வீடு சென்ருர்.

## ரு. பிற்காலம்

***சிறை நீங்கியபின்***

சிறையிலிருந்து வெளிவந்த பிறகு, நாட்டுப்பணி செய்த சிதம்பரனாருக்குச் சுப்பிரமணிய சிவாவைத் தவிர மற்றையோரின் இனிய வரவேற்புக் கிடைக்க வில்லை. அவர் சிறையிலிருந்து வந்த பிறகு, முதன் முறையிற் கண்ட சிவா, 'அப்பா! சிதம்பரம்! வந்தனையா?' எனக் கண்ணீர் பெருகத் தழுவிக் கொண்டனராம்! இவரைத் தவிர மற்றையோர் ஏனென்றும் வினவவில்லையாம்! என்னென்பது தமிழ் நாட்டின் சால்பை! மனைவி மக்களின் நலத்தையும் தாம் படித்த கல்வியாற் கிடைத்த தொழிலையும் அறவே துறந்து தமிழ்நாட்டுக்குப் பணி செய்ததன் பரிசாகச் செக்கிழுத்த சிதம்பரனாருக்கு நன்றி தெரி விக்கவும் அந்நாளிலே எவரும் முன்வரவில்லை. வராத தற்குக் காரணம் என்ன? வெள்ளையராட்சியில் விளைந்த, அச்சத்திலே ஊறிய, தன்னலங்கனிந்த மனப் பான்மையே போலும்! சிறையிலிருந்து வெளிவந்த சிதம்பரனார் சென்னைக்கு வந்தார். மயிலாப்பூர், சிந்தா திரிப்பேட்டை, பிரம்பூர் ஆகிய இடங்களிலே சில ஆண்டுகள் கழித்தார். அரசரைப் பழித்துச் சிறை யிருந்ததனாலே சிதம்பரனாரின் வக்கீல் 'சன்னத்து'* பறிமுதலாயிற்று. எனவே, வாழ்க்கையை நடத்தவும் பொருள் கிடைக்காமல் முட்டுப்பாடு பெற்றார். வழக் கறிஞராகத் தொழில் நடத்தும்போது புலவர்களுக்கும் பிறர்க்கும் பொருளை வாரி வழங்கி, 'நல்லூர்ப் பழுத்த

---

* அரசினரால் அளிக்கப்படும் வேலை உரிமை இதழ்.

நற்றருவை நிகர் கரத்தாய்' எனவும் 'இரப்போர்க்கெல்லாம் தருவருடம் போலுதவும் சிதம்பர சம்பன்ன,' எனவும் புலவர்களாற் போற்றப்பெற்றவர்! வறிஞரொருவரின் பெண்ணுக்குத் திருமணம் நடத்த ஆயிரம் ரூபாக்களை அள்ளிக் கொடுத்தவர். அத்தகைய வள்ளல் தம் பிற்கால வாழ்விலே உணவுக்கும் உடைக்கும் திண்டாடினார்! இல்லையென்ற சொல்லைத் தம் வாயாற் கூருமல்—வந்து நின்றவரின் வாயால் இல்லையென்று கூறும் முன்னரே - பொருளை வழங்கி, வந்தவரின் இன்முகத்தைக் கண்ட ஏந்தல் தம் வாயால் தம்மிடம் ஒன்றும் இல்லாமற் போயினதே என்று பாடினார்.

"வந்தகவி ஞர்க்கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்
தந்த சிதம்பரன் தாழ்ந்தின்று - சந்தமில்வெண்
பாச்சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடுகிருன்
நாச்சொல்லும் தோலும் நலிந்து"

என்பதுதான் அப்பாட்டு. 'சந்தம் இல் வெண்பா' என்பதனல் அவருக்குத் தம் வறுமையைப் போக்கப் பாடுவது சிறிதும் பிடிக்கவில்லையென்பதை உணரலாம். அந்தோ! தாம் தொண்டு செய்த தமிழ்நாட்டிலே தம்மை ஆதரிப்பாரின்றி அவர் வறுமையுற்றுக் கிடந்ததை நன்றியறிதலுடைய எவ்வுள்ளந்தான் பொறுக்கும்?

சிறையிருப்புக்குச் சிறிதும் அஞ்சாத நம் செம்மலார் வறுமையிருப்புக்கு மனம் மாழ்கினர். அத்தகைய வறிய நிலையிலும் தொழிலாளர் பணியைப் பண்புடன் செய்து வந்தார். பிரம்பூர் 'ரயில்வே'த்

தொழிலாளர் கழகத் துணைத் தலைவராக இருந்து, அவர்களின் நலனுக்கு ஆவன செய்தார்.

இப் பெரியாரின் வறியநிலை கண்டு மனம் வருந்திய இ. எச். வாலஸ் என்னும் நீதிபதி அவர்கள் பெருமுயற்சி யெடுத்து வக்கீல் 'சன்னத்'தைத் திரும்பவும் வாங்கி வழங்கினர். தம் 'சன்னத்'தைத் திரும்பவும் பெற்ற பிள்ளையவர்கள் கோயில்பட்டியை அடைந்து வழக்கறிஞர் தொழில் நடத்தினர். பிறகு, தூத்துக்குடியை அடைந்து வாழ்ந்து வந்தார்.

**மீண்டும் அரசியற் பணி**

1919இல் கல்கத்தாவில் காங்கிரசின் தனிக் கூட்டம் ஒன்று கூடியது. அக் கூட்டம் காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டத்தை ஆராயவே கூடியது. அதுவரையில் ஆங்கில ஆட்சியில் நடந்த சில கொடுமைகளைக் கண்டித்து, அரசியலில் ஒத்துழைக்காமல் அறமுறையில் ஆங்கில அரசாங்கத்துடன் போர்புரிவதைப் பற்றிக் காந்தியடிகள் ஒரு திட்டம் கொண்டுவந்தார். அக் கூட்டத்திற்கு நம் சிதம்பரனர் சென்றார். மற்றும், உயர்வுமிகு, இராசகோபாலாச்சாரியார், விஜயராகவாச்சாரியார், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை போன்ற பல அறிஞர்களும் சென்றனர். சிதம்பரனர் காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டத்தையும், அறப்போர் தொடுப்பதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இங்கு அறப்போர் என்பது எதிரியின் மனத்தை மாற்ற 'அஹிம்சை' முறையிலே ஒத்துழையாதிருப்பதுதான். இச் செயல் போரிடும் ஆற்றலற்ற முதியவர்களின்

திட்டம் என்பது சிதம்பரனாரின் கருத்து. எதிரியை அச்சுறுத்தியே உரிமையைப் பெற விரும்பினார் சிதம்பரனார்.

ஆகவே, கல்கத்தாவிற்குச் செல்லும்போது தம் கருத்துக்கு ஆதரவுதேட முயன்றார். அக்காலத்திலேயே காந்தியடிகளின் அறப்போரிலே பெரும்பாலார் பற்றுக்கொண்டுவிட்டதனால், இவருடன் வாதம் புரியும் ஆற்றலில்லாவிடினும் இவருடன் பலர் சேரவில்லை. அந்நாளில், தம்மைப்போல் நாட்டுப்பணியிலே ஈடுபட்டுச் சிறை சென்றுவந்து, ஆங்கிலேயரை அஞ்சுமாறு செய்தவர்கள் சிலரெனினும், தாம் மேற்கொண்ட கொள்கைக்காக எளியவரிடமும் சென்று பேசினார். தாம் பெரும் புகழ்பெற்றவர் என்ற செருக்குச் சிறிதும் அவர் கொள்ளவில்லை; தம் கருத்துக்கு ஒத்துவராதவர்களிடம் வெறுப்புங் காட்டவில்லை. யாவரிடமும் இனிமையும் பணிவுங்கொண்டு நல்லுரையாடுவதில் நம் சிதம்பரனார் முதன்மை பெற்றவர். தீவிரவாதியாக விளங்கிய சிதம்பரனார் போன்று காந்தியடிகளின் அறப்போரிலே நம்பிக்கையில்லாத பல சிறந்த தலைவர்கள் வந்திருந்தாலும், பெரும்பாலார் ஆதரவிலே காந்தியடிகளின் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆகவே, சிதம்பரனார் காங்கிரசிலிருந்து பணிபுரிய விரும்பாமல் வெளிவந்துவிட்டார். எனினும், காந்தியடிகளிடம் வைத்திருந்த பேரன்பிலே சிறிதும் மாறவில்லை. அடிகள் தென் ஆப்பிரிக்காவிலே அறப்போர் தொடுத்த நாளிலிருந்தே சிதம்பரனார் அவரிடம் அன்பு கொண்டிருந்தார். ‘உலகெலாம் புகழும் நலமெலாம்

அமைந்த காந்திமா முனிவன்' எனப் பாராட்டிவந்தார். அடிகளின் ஒழுக்கத்திற்குப் பெருமதிப்புக் கொடுத்து வந்தாலும், தம் கொள்கையை விட்டுக்கொடுக்க வில்லை. இது சிதம்பரனாரின் தூய மனவுறுதியைக் காட்டவில்லையா? தமக்குப் பிடிக்காவிட்டாலும் தம் மினும் பெரியார் என்பதற்காக அவருடைய கொள் கையில் ஈடுபடும் கோழைத்தன்மை அவரிடம் இல்லை. காந்தியடிகளும் நம் சிதம்பரனாரிடம் தூயஅன்பும், நாட்டுப்பற்றுக்கும் தொண்டுக்கும் நன்மதிப்பும் வைத்திருந்தார்.

காங்கிரசிலிருந்து விலகிய சிதம்பரனார் மீண்டும் 1927இல் சேர்ந்தார். சேலம் மாவட்டத்திலே நடந்த அரசியல் மாநாட்டிலே தலைமையேற்றார். அக்காலத் தில் காங்கிரசின் கொள்கை அரசாங்கத்துடன் ஒத் துழைப்பதாக இருந்தது. அப் பேரவையில் தலைவராக இருந்து அரிய பொன்மொழிகளால் எல்லோருடைய உள்ளத்தையும் மகிழ்வித்தார்.

பண்பு

சிதம்பரனார் சிறந்த வீரர் என்பதை உணர்ந்தோம். 'சிதம்பரனாரின் சொற்பொழிவையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால், உடனே, செத்தபிணம் உயிர்த்தெழும்! அடிமை நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்! புரட்சி ஓங்கும்' எனச் சிதம்பரனாரைத் தண்டித்த நீதிபதி 'பின்ஹே' கூறுமாறு அவருடைய பேச்சிலே புரட்சித்தீ பொங் கியது அக்காலத்தில்!

இப் பெரியாரிடம், பிறர் பிழை பொறுக்கும் பெருந் தகைமை யிருந்தது. இவர் சிறைக்குச் சென்றிருந்த

போது, நாவாய்ச் சங்கம் முறிந்துவிட்டது! அதனை நன்கு நடத்த ஒருவரும் முன்வரவில்லை. அதை ஏற்று நடத்திய உறுப்பினர் கப்பல்களை விற்றுப் பங்கிட்டுக் கொண்டனர். யாரிடத்தில் விற்றனர்? வெள்ளை யரோடு போட்டியிட வாங்கிய 'காவியா' என்னும் கப்பலை அவர்களிடமே விற்றனர். இலட்சம் ரூபாக்கள் கொடுப்பதாகக் கூறி இதே கப்பலை முன்னர்ச் சிதம்பர னாரிடம் அவர்கள் வினவியபோது, அவர்கள் வலையில் வீழ்ந்து நாட்டுக்குத் தீங்கிழைக்க நம் சிதம்பரனார் விரும்பவில்லை. இதனை உறுப்பினர்கள் நன்கு உணர் வார்கள். அத்தகையாருடைய மனம் புண்படும்படியா கத் தமக்கென உரிமைப்பற்ருே நாட்டுப்பற்ருே இல்லாமல், அவர்கள் விற்றதை எச்சொல்லால் இழித் துரைப்பது?

அப் பெரியார்கள் அதனோடு நில்லாமல், தங்கள் சுதேசிய நாவாய்ச் சங்கம் முறிவுற்றதற்குச் சிதம்பர னாரின் அரசியல் நுழைவையே காரணமாகக் காட்டி இழந்த பொருளை ஈடுகட்டித்தர அவரே பொறுப்பாளி யென வழக்குத் தொடரவும் முயன்றனராம்!

சிதம்பரனார் சிறையில் இருக்கும்போதே இச் செயல் நிகழ்ந்தது. நண்பர்களின் வாயிலாக உணர்ந்த சிதம்பரனார் எண்ணியெண்ணி மனம் புழுங்கினார். ஏறுமாருன தமிழர்களின் இத்தகைய பண்பு அவரை மனங்கசிய வைத்தது. எனினும், உடனே தெளி வுற்று நண்பர்கட்குக் கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில்,

"என்னால் துவக்கப்பட்ட சுதேசிக்கப்பல் கழ கத்திற்குப் பொருள் கொடுத்த யாவருக்கும் என்

வணக்கம். அது முறிந்ததால், ஏற்பட்ட பொருட் குறை ஈடுபாட்டைக் கழக உறுப்பினரே ஏற்றல் வேண்டும். அவர்கள் மறுத்தால், நானே நல்கு கிறேன். சிறையிலிருந்து வெளிவரும் வரை பொறுத்துக்கொள்க,"

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தம் வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்த அக் கழகத்தினை முறித்ததும் அன்றிக் குறையும் கூறிய நண்பர்களின் பிழையைப் பொறுத்துக்கொண்ட அவர் பண்பை என்னென்பது!

இவர் தம் நண்பருக்குச் **சிறந்த நண்பர்.** சுவாமி வள்ளிநாயகம் என்பவரும், சுப்பிரமணிய சிவாவும், பாரதியாரும் மற்றும் பல வழக்கறிஞர்களும் செல்வர்களும் இவருக்கு உற்ற நண்பர்கள்.

**தீண்டாமையை வெறுத்தவர்.** இராமைய தேசிகர் என்னும் புறக்கண்ணிலாத ஒருவரும், சுவாமி சகசானந்தரும் இவருக்குத் தீண்டா வகுப்பிற் பிறந்த நண்பர்கள். இவர்களைத் தம் வீட்டிலேயே வைத்து ஆதரவு செய்துள்ளார்.

**சைவசமயப் பற்றுடையவர்**

**செய்ந்நன்றி மறவாத சீரியர்.** சுதேசிய நாவாய்ச் சங்க வளர்ச்சியில் ஊக்கங்காட்டி உதவிய தூத்துக்குடி ஆறுமுகம் பிள்ளையவர்களின் பெயரைத் தம் முதல் மகனுக்கு வைத்தார். வழக்கறிஞர் உரிமையைத் திரும்பவும் பெற உதவிய 'வாலஸ்' துரையின் பெயரை 'வாலீஸ்வரன்' என இளைய மகனுக்கு

வைத்தார். வேண்டும்போது பொருள் கொடுத்துவந்த 'வேதியப்பப் பிள்ளை' அவர்களின் நினைவுக்காக 'வேதவல்லி' என்ற பெயரைத் தம் அருமை மகளுக்கு வைத்தார். இவைபோன்ற பல நன்றியறிதற் செயல்கள் சிதம்பரனாரிடம் காணப்பெற்றன. "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண், விழுமம் துடைத்தவர் நட்பு" என்னும் தமிழ் மறைக்குச் சான்று இவரே.

**கொடைப்பண்பு** முன்னரே அறிந்தோம். பொருளையும் கொடுத்தார்; உழைப்பையும் கொடுத்தார். இவ் விருதிறக் கொடையாலும் அவர் பெற்ற பரிசு வறுமையே. எனினும், அப்பண்பு அவரை விடவில்லை.

**தூய்மை மிக்கார்** என்பதை அவருடைய வழக்கறிஞர் தொழிலிலும் கண்டோம். நாட்டுப்பணியிலும் சிறை வாழ்விலும் அவருடைய தூய பண்பு மாறவில்லை. தற்புகழ்ச்சி, ஆடம்பரம், பொறாமை, புறங்கூறல் ஆகிய தீய பண்புகள் சிறிதும் சேர்ந்தில.

**'சீர்தூற்றல்'** என்பது சிதம்பரனாரின் சீரிய பண்பு. 1919இல் நடந்த கல்கத்தா காங்கிரசிற்குச் சென்னையிலிருந்து ஒரு குழு சென்றது. அக் குழுவிலேயிருந்த பல பெரியார்கள் உரையாடிக்கொண்டு சென்றனர். அப்போதுதான் அறிமுகமானார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை அவர்கள். அரசாங்கக் கவிஞர் பட்டம் அப்போது அவர்கட்கு இல்லை. சிதம்பரனாரும் செய்யுளியற்றுவதிலே சிறப்புற்றவர். இருவரும் திலகர் பிரிவு குறித்து இரங்கற்பாக்கள் எழுதியிருந்தனர். கவிஞர் இராமலிங்கம் பிள்ளையவர்களின் பாக்களை அப்போதுதான் படித்த சிதம்பரனார் மகிழ்வுடன்,

'நானும் திலகரைப்பற்றி இரங்கற்பாக்கள் பாடியுள்ளேன். இப்படி அமையவில்லை. உண்மையான கவித்திறம் எல்லோருக்கும் வருவதன்று,' என்று பாராட்டினாராம். நாடறிந்த பெரும்புகழ் பெற்ற சிதம்பரனாரின் செம்மனத்தை என்னென்பது!

**தமிழ்த்தொண்டு**

சிதம்பரனார் சிறந்த தமிழ்ப்புலவர். தமிழ்க் காவியங்களை நன்கு கற்றவர். திருக்குறள் இவரது வாழ்க்கை நூல். இவருடைய பேச்சிலும் எழுத்திலும் திருக்குறளின் பொன்மணிகள் ஒளிவீசும். திருக்குறளுக்கு மணக்குடவர் உரையை வெளியிட்டுள்ளார். மேலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார். தொல்காப்பியம் இளம்பூரணர், இன்னிலை யென்னும் சங்கநூல் ஆகியவற்றையும் பதிப்பித்துள்ளார்.

தமிழ் வளர்ச்சிக்குப், 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்' என்பதனை உட்கொண்டு **'அகமே புறம்' 'வலிமைக்கு மார்க்கம்' 'மனம்போல வாழ்வு'** என்னும் நூல்களை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்துள்ளார்.

சிறையில் இருக்கும்போது தம் நண்பர்கட்குக் கடிதம் எழுதும் முறையிலே தம் வரலாற்றைச் செய்யுள் வடிவிலே அமைத்துக்கொடுத்திருக்கிறார். அச்செய்யுட்கள் அழகிய எளியநடையிலே சிறந்த கருத்துக்களுடன் மிளிர்கின்றன. மற்றும், ஈகை, அன்பு, உண்மை முதலிய ஒழுக்கப் பாக்களும் கடவுளைப் பற்றிய சமயப் பாக்களும் எழுதியுள்ளார். **'மெய்யறிவு' 'மெய்யறம்'** என்னும் ஒழுக்க நூல்களும் செய்யுள் வடிவிலே பழந்தமிழ் நூல்களைப்போல விளங்குகின்றன.

சிதம்பரனார் பலருக்குத் தமிழ்க்கல்வி கற்பித்திருக்கிறார். மேன்மை தங்கிய இராசகோபாலாச்சாரியார் அவர்கள் சிதம்பரனாரிடம் திருக்குறள் பாடங் கேட்டிருக்கிறார். பாடங் கூறும்போது உளத்தில் நன்கு பதியுமாறு விளக்குவதுடன் பாடங் கேட்போரைப் பாடம் ஒப்பிக்கவும் வற்புறுத்துவார். சிலர் பாடங் கேட்க விரும்புவார்களேயன்றிப் படிக்கச் சோம்பி நிற்பர். அத்தகையோர்க்குப் பாடஞ்சொல்ல நம் சிதம்பரனார் விரும்பார். அவருடைய போதனை ஆராய்ச்சியுடன் சிறந்த பயனைத் தருவதாக இருக்கும்.

**பிரிவு**

1936ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள், 18ஆம் நாள் நள்ளிரவில், 'சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்து துஞ்சிடோம்' என்ற வீரமொழி குன்ற, அவருடைய வீரத் திருவுருவை—புகழுடம்பை—நம் ஒவ்வொருவருடைய அகத்திலேயும் நிறுவியவாறு தம் ஊனுடலை நீத்தார்.

அவருடைய உள்ளத்திலே நாட்டுப்பற்று எப்போதும் ஊறிக்கிடந்தது. உயிர்விடுந் தறுவாயில், 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே' என்றும், 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்றும் தொடங்கும் பாரதியாருடைய நாட்டுப் பாடல்களை—நோயாய் இருக்கும்போது நாட்டு மக்களின் வறுமை என்று தொலையுமோ என்ற ஏக்கமே இருந்தது. தம் நண்பர் ஒருவரிடம், 'நம் நாட்டிலே ஆதரவற்றுக் கண்ணீர்விட்டுக் கதறியழுது தங்கள் காலத்தைக் கடத்திவருங் குடும்பங்கள் கோடிக் கணக்காக இருக்கின்றனவே! அவர்கள் துயர் என்று

தீருமோ!' எனக் கூறி விம்மி யழுதாராம்! என்னே அவருடைய நாட்டுப்பற்று! நாட்டின் விடுதலை வேட்கை!

அவர் வெள்ளேயரை வெளியேற்ற விரும்பிய அதே முழக்கம், இப்போது காந்தியடிகளின் உரிமைப் போரிலே வெற்றியுடன் முழங்கிப் பயன்கொடுத்தது. அவருடைய இறுதிக்காலத்திலே கனவுகண்ட நாட்டின் விடுதலே இப்போது நனவாகியது; அவர் நம்நாடு அடிமைத்தளேயிலே இருந்தபோது கப்பலோட்டினர். இப்போது—உரிமை நாடாகியபோது—அவர் பெயரால் கப்பலோட்டினேம்! இப்போது அவருடைய ஆன்மா அமைதியடைந்திருக்கும்.

நினைவு

நாட்டுப்பற்று ஒன்றையே தம் வாழ்வின் நோக்கமாகக்கொண்டு, 'வந்தே மாதரம் என்றுயிர் போம் வரை வாழ்த்துவேன்,' என்ற வீரமுழக்கத்துடன் தொண்டு புரிந்த சிதம்பரனாரை அந்நாளிலே மக்கள் நன்கு போற்றவில்லை. எனினும், இக்காலத்திலே அவரை அறிஞர் பலர் புகழ்கின்றனர்; நினைவுச் சின்னங்களை அமைக்கின்றனர். 1939ஆம் ஆண்டு டிசம்பர் இருபத்தொன்றில் சென்னை மாவட்டக் காங்கிரசுக் குழுவினர் இராயப்பேட்டையில் காங்கிரசு மண்டபத்திலே முக உருவச் சிலை அமைத்தனர். அதனைத் திறக்கும்போது டாக்டர் டி. எஸ். எஸ். இராஜன் அவர்கள் கூறியவை நினைக்கத் தக்கவை.

"சிதம்பரனார் தூய தமிழர். தமிழருக்குரிய ஆண்மையும் ஆற்றலும் ஒரு வடிவெடுத்துக் கண்

னுக்குத் தோன்றுமானால், அது சிதம்பரம் பிள்ளையைப் போலத்தான் தோன்றும். நான் இங்கிலாந்தில் இருந்தபோதும் அதற்குப் பின்னர் சிலநாள் வரையிலும் அரசியலிற் புரட்சிக்காரனா கவே இருந்தேன். அதற்குக் காரணம் சிதம்பரம் பிள்ளை நடத்திய தூத்துக்குடிப் புரட்சியே ஆகும். எனவே, சிதம்பரனார் என்னுடைய முதல் அரசியல் குரு என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன்...நாம் நடத்தும் சுதந் தரப்போரில் சிதம்பரனார், ஆவி வடிவில் வந்து நின்று நமக்குத் துணை புரிகிறார் என்றே நம்பு கிறேன்.''

இவ்வாறு கூறியுள்ளதை நாம் நினைக்கும்போது சிதம்பரனாரின் புகழ் எத்தகையதென்று தெரிகின்ற தன்றோ!

நாடு உரிமைபெற்ற பிறகு 'ஜலப்பிரபா' என்ற கப்பலைக் கடலில் மிதக்கவிட்டபோது, பாரத நாட்டின் துணையமைச்சர் சர்தார் படேல் சிதம்பர னாரின் வீரத்தைப் பாராட்டினார். 9-2-49இல் தூத்துக் குடிக்கும் சிங்களத்துக்கும் போக்குவரத்தாக விட்ட முதற் கப்பலுக்கு 'வி. ஓ. சிதம்பரம்' என்று தென்பாண்டி வணிகர் பெயரிட்டனர். மேன்மைதங்கிய இராச கோபாலாச்சாரியார் சிதம்பரனாரை வாழ்த்தினார். சிதம்பரனார் பெயரால் பல கழகங்கள் அங்கங்கே தளிர்த்துள்ளன. இவற்றால் தமிழ் மக்களின் உள்ளத் திலே சிதம்பரனாரின் தொண்டும் பற்றும் வேரூன்றி விட்டன. ஆகவே, தமிழ் மக்களிற் பல வீர சிதம்பர னார் தோன்றுக! வீர சிதம்பரனார் பெயர் வாழ்க!

***வீரர் சிதம்பரம் பிள்ளை***

“கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுக் கேட்கும்;
    கறுப்பெனினும் சிரித்தமுகம் கருணை காட்டும்
குள்ளமேன்னும் ஒருருவம் இருகை கூப்பிக்
    குண்டெடுத்துக் கடைந்ததேனக் குலுங்க நிற்கும்;
வெள்ளையன்றி வேறுநிறம் அறியா ஆடை
    வேதாந்த சித்தாந்த ஒளியே வீசும்
கோள்ளைகோள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும்
    குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால்.

—அரசவைக் கவிஞர், இராமலிங்கம் பிள்ளை.

———

## தேர்வுப் பயிற்சிகள்:

1. சிறுசிறு கட்டுரைகள் வரைக.
   - அ. பண்டைத் தமிழரின் வீரம்
   - ஆ. சிதம்பரனாரின் இளமை வாழ்வு
   - இ. சிதம்பரனாரின் வக்கீல் தொழில்
   - ஈ. கப்பலோட்டிய சிதம்பரனார்
   - உ. சிதம்பரனாரின் நாட்டுப்பற்று
   - ஊ. முதல் தேசியக் கப்பல் கம்பெனி
   - எ. ஆங்கில அரசும் சிதம்பரனாரும்
   - ஏ. சிதம்பரனாரின் சிறை வாழ்வு
   - ஐ. சிதம்பரனார் காலத்தில் தமிழ்நாட்டின் நிலை
   - ஒ. தமிழ்ப்புலவர் சிதம்பரனார்
   - ஓ. வீட்டிற்கொரு வீர சிதம்பரம்
2. சிதம்பரனார் வாழ்க்கையை உன்னிலும் சிறுவன் ஒருவனுக்குச் சொல்வது போன்று எழுதுக.
3. ஓர் ஆங்கிலேயன் சிதம்பரனார் வரலாற்றைக் கூறுவது போன்று கட்டுரையொன்று வரைக.
4. சிதம்பரனார் பெயரால் வழங்கும் நினைவுச்சின்னங்கள் கழகங்கள் முதலியவற்றின் விவரங்களைத் தொகுக்க.